இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 75 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 07 – செவ்வாய்க்கிழமை 24 அக்டோபர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 75: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 07 - Tuesday 24 October 2023 - Chennai 16 Pages ₹ 5.00



## கழகத் தலைவர் – முதல்வர் வழிகாட்டுதலின்படி, கழக அணிகள் செயல்திட்டத்தை ஏற்படுத்தி

# ‘நீட்’ தேர்வில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## கழக அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற ‘நீட்’ விலக்கு நம் இலக்கு’ எனும் காணொலிக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

சென்னை,அக்.24–

**‘கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் வழி காட்டுதலின்படி, கழக அணிகள் செயல்திட்டத்தை ஏற்படுத்தி ‘நீட்’ தேர்வில்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்’ என கழக அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற ‘நீட்’ விலக்கு நம் இலக்கு’ எனும் காணொலிக் கூட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரைத்தார்.**

நீட் தேர்வுக்கு எதிரான, ‘நீட் விலக்கு நம் இலக்கு’என்ற கையெழுத்து இயக்கத்தை மாபெரும்மக்கள்இயக்கமாக முன்னெடுப்பது தொடர்பாக கழக அணிகளின் செயலாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், இணை, துணைச் செயலாளர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:

“கழகத்தினுடைய அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகளையும் சந்திப்பதில் மகிழ்ச்சி. நம் கழகமும், கழக அரசும் மாநில சுயாட்சிக்காகவும், கல்வி உரிமைக்காகவும் தொடர்ந்து போராடி வருகிறது. குறிப்பாக ஏழைஎளிய கிராமப்புற, அரசுப் பள்ளி மாணவர்கள் மருத்துவம், தொழில்நுட்பக் கல்வியில் பின்தங்கிவிடக் கூடாது என்பதற்காக, ‘12ஆம் வகுப்பில் எடுக்கும் மதிப்பெண்களின் அடிப்படையிலே உயர் கல்விச் சேர்க்கை நடைபெறும்’ என்று கூறி நுழைவுத் தேர்வை ஒழித்தவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### நீட் தேர்விலிருந்து முதலில் விலக்கு பெற்றது கலைஞர் ஆட்சியில்தான்!

ஒன்றிய அரசினால் ‘நீட் தேர்வு’ இந்தியா முழுவதும் திணிக்கப்பட்டபோது, ‘இந்தத் தேர்வு சமூகநீதிக்கு எதிரானது, மருத்துவத்தில் முன்னேறிய மாநிலமான தமிழ்நாட்டு நலனுக்கு எதிரானது’ என்று எடுத்துக் கூறி இந்தத் தேர்வில் இருந்து நாம்தான் தமிழ்நாட்டுக்கு விலக்கு பெற்றோம்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக இளைஞர் அணி சார்பில் 21.10.2023–ல் நடைபெற்ற நீட் தேர்வு விலக்கு மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்த காட்சி.

ஆனால் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் மறைவுக்குப் பிறகு, பாசிச பா.ஜ.க. அரசின் தயவால் இங்கு ஆட்சியைத் தக்க வைத்திருந்த அடிமை அ.தி.மு.க. அரசு, நம் மாணவர்கள் மீது நீட் தேர்வை வலுக்கட்டாயமாகத் திணித்தது. எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அடிமைக் கூட்டம், நம் கல்வி உரிமையை மோடிஅமித்ஷாவிடம் அடகு வைத்து, நீட் தேர்வை தமிழ்நாட்டுக்குள் அனுமதித்தனர்.

‘நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற்றுத் தருவோம் என்று நாம் சொன்னோம். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்’ என்று நாம் வெளிப்படையாக ஒப்புக்கொண்டு மக்களைச் சந்திக்கிறோம். ஆனால் நீட் தேர்வு திணிக்கப்பட்டபோது, அப்போதைய அ.தி.மு.க. அரசு என்ன சொன்னது, ‘ஒன்றிய அரசுஉச்சநீதிமன்றம் சொல்லிவிட்டது. இதைத் தவிர, அரசுக்கு வேறு வழி தெரியவில்லை’ என்றது.

### பழனிசாமியின் சுயநலத்தால் தமிழ்நாட்டில் ‘நீட்’ தேர்வு திணிப்பு!

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களே நீட் தேர்வுக்கு எதிரான மனநிலையில், இருக்கிறார்கள் என்பது திரு.எடப்பாடி பழனிச்சாமிக்கே நன்றாகத் தெரியும். ஆனால், தன்னுடைய சுயநலத்துக்காக மக்களின் அந்த எதிர் மனநிலையையும், அவர்களுடைய அரசு இயற்றிய சட்டமன்றத் தீர்மானத்தையும் அவரே நீர்த்துப்போகச் செய்தார். அ.தி.மு.க. என்ற சுயநலக் கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கையால்தான் தங்கை அனிதாவில் தொடங்கி, குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை இதுவரை நம் வீட்டுப் பிள்ளைகள் 22 பேரை நாம் இந்த நீட் தேர்வுக்குப் பறிகொடுத்திருக்கிறோம். நீட் தேர்வு திணிக்கப்பட்ட நாளில் இருந்தே, நாம் அதற்கு எதிராகப் போராடி வருகிறோம். ஆர்ப்பாட்டம் – போராட்டம் என களத்தில் இறங்கி, போராடியிருக்கிறோம். நாம் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், அரசு அமைந்தவுடன் நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதற்கான நடைமுறைகளைத் தொடங்கினோம்.

### ‘நீட்’ தேர்வு விலக்கின் அவசியத்தை பிரதமரிடம் எடுத்துரைத்தேன்!

அரசு அமைந்து சரியாக ஒரே மாதத்தில், நீட் தேர்வு பற்றி முழுமையாக ஆராய்ந்து, நம் மாணவர்களின் நலன் காப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளித்திட, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு.ஏ.கே.ராஜன் அவர்களின் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்றை நம் முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள்.

நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் அரசுக்கு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், நீட் நுழைவுத் தேர்வு முறையிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிப்பதற்காக, ‘தமிழ்நாடு மருத்துவப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டம்2021’ என்ற சட்ட முன்வடிவு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுவதற்காக ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பியுள்ளோம். இந்திய ஒன்றியத்தின் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நான் டெல்லியில் சந்தித்துப் பேசும்போது, நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்க வேண்டிய தன் அவசியம் குறித்துப் பேசினேன்.

கடந்த ஆகஸ்டு 20ஆம் தேதி நாம் அனைவரும் நடத்திய உண்ணாநிலை அறப்போராட்டத்தில்கூட, ‘வாருங்கள் நாம் அனைவரும் போராடுவோம். நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைத்தால் அதற்கான கிரெடிட்டை நீங்களேகூட எடுத்துக்கொள்ளுங்கள்’ என்று எடப்பாடிக்கு அழைப்பு விடுத்தேன்.

நீட் விலக்கைவிட அவர்கள் மீதான வழக்குகள்தான் அவர்களை பயமுறுத்துகின்றன. அதனால், அவர்கள் என்றும் நீட் விலக்குக்காக வரவேமாட்டார்கள். அவர்கள் சூழலுக்குத் தகுந்தாற்போல் தங்களை மாற்றுக்கொள்ளும் பச்சோந்திகள். அவர்களை எதிர்பார்த்துப் பயனில்லை.

### வழக்குகளுக்கு பயந்து பச்சோந்தியாக மாறும் பழனிசாமி!

நம் மாணவர்களை, நம் கல்வி உரிமையை நாம்தான் காக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தக் கையெழுத்து இயக்கத்தை, முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணிமாணவர் அணிமருத்துவ அணி சார்பில் தொடங்கினோம்.

இதன் தொடக்க நிகழ்ச்சி, தமிழ்நாடு முழுவதும் கழக மாவட்டங்கள் வாரியாக நேற்று முன்தினம் மிகப்பெரிய அளவில் நடைபெற்றது. நம் அமைப்புச் செயலாளர் அவர்கள்கூட கடலூர் மேற்கில் தொடங்கிவைத்து, உரையாற்றி இருக்கிறார்கள். அதேபோல் இங்குள்ள அணிகளின் மாநில நிர்வாகிகள் பலர் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று இந்தக் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கி வைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

**நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மன நிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையிலும், இதில் நாம் கலந்துகொள்ளவில்லை என்றால், நாம் மக்களால் வெறுக்கப்படுவோம் என்று பிற கட்சிகள் அஞ்சும் வகையிலும் இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



`நீட் விலக்கு நம் இலக்கு’ எனும் கையெழுத்து இயக்கத்தைத் தொடங்கியுள்ள நிலையில், அதற்கு மிகப்பெரிய ஆதரவை தமிழ்நாட்டு மக்களும் மாணவர்களும் அளித்து வருகின்றனர். இந்தக் கையெழுத்து இயக்கத்தை இன்னும் வேகமாகவும் மாபெரும் மக்கள் இயக்கமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்காக தி.மு. கழகத்தின் அனைத்து அணிகளின் செயலாளர்கள், தலைவர்கள், துணை – இணைச் செயலாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கழக அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

## தமிழ்நாட்டிற்கு ‘நீட்’ தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்!

# சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை!

## முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கருத்து!

*புதுக்கோட்டை, அக்.24-*

*சாதிவாரி கணக்கெடுப்பு கண்டிப்பாக தேவை என்று ப.சிதம்பரம் கூறினார். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே கொத்தமங்கலத்தில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு:-*

*கொரோனா காலத்தில் 2 ஆண்டு காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்காமல் இருந்தது. இதனால் பல திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனது. சாதிவாரி கணக்கு என்பது கண்டிப்பாக தேவை. இதன் மூலம் அரசு வேலைகளில், பள்ளி கல்லூரிகளில் ஒதுக்கீடு செய்யலாம்.*

*நாடாளுமன்றத்தில் கூட ஒரு எம்.பி. புலிகள், யானைகளை கூட கணக்கீடு செய்யப்படுகிறது என்று வேடிக்கையாக சொன்னார். ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் வறுமையில் இருக்கிறார்கள் என்பது கணக்கெடுத்தால்தான் தெரியும்.*

*பத்தாண்டுக்கு ஒரு முறை எடுக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பையே ஒன்றிய அரசு எடுக்கவில்லை. இதை 2021லேயே எடுத்திருக்க வேண்டும். நீட் தேர்வு தேவையில்லை என்பதுதான் எனது கருத்து.*

*தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. ஆரம்ப காலத்தில் இருந்து வைக்கும் கோரிக்கை. தமிழ்நாட்டில் ஏறத்தாழ அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட கோரிக்கை இது. நீட் தேர்வு இல்லாமல் தான் புகழ்பெற்ற மருத்துவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். தி.மு.க.வினர் கையெழுத்து இயக்கத்தை ஜனநாயக முறைப்படி நடத்துகின்றனர்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*

---

## காத்மாண்டுவில் நில நடுக்கம்!

### 95 வீடுகள் இடிந்தன!

காத்மாண்டு, அக்.24 –

நேபாள் தலைநகர் காத்மாண்டுவில் நேற்று காலை 7.39 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 6.1 அளவில் பதிவான அந்த நில நடுக்கம் தாடிங் மாவட்டத்தை மையமாக கொண்டு ஏற்பட்டதாக தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்தது. அதன் அதிர்வுகள் பாகமதி மற்றும் கண்டகி மாவட்டங்களிலும் உணரப்பட்டது. அதன் பின் 3 முறை லேசான அதிர்வுகள் பரவலாக உணரப்பட்டது.

நிலநடுக்கத்தால் தாடிங் மாவட்டம் ஜுவாலாமுகி முனிசிபாலிட்டியில் உள்ள 20 வீடுகள் தரைமட்டமானதுடன், 75 வீடுகளின் சுவர்கள் இடிந்துள்ளதாக அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். நிலநடுக்க சேதம் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

---

## ஓமன் - ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும்!

# மிகத் தீவிர புயலாக உருவெடுக்கிறது ‘தேஜ்’!


## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக். 24 -

கடந்த 19ம் தேதி காலை தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, அன்றைய நாள் நள்ளிரவிலேயே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக தென்மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் நிலவியது.

இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, தென் மேற்கு அரபிக் கடல் பகுதிகளில் புயலாக உருவெடுத்தது. தென்மேற்கு அரபிக் கடலில் உருவாகியுள்ள இந்த புயலுக்கு ‘தேஜ்’ என பெயரிடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், இந்த புயல் நேற்று முன்தினம் தீவிர புயலாக வலுவடைந்ததாக வானிலை ஆய்வுமையம் அறிவித்திருந்தது. மேலும் இந்த புயலானது அதி தீவிர புயலாக மாறி, நாளை (25ம் தேதி) அதிகாலை ஓமன் மற்றும் ஏமன் இடையே கரையைக் கடக்கும்என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்திருந்தது.



இந்நிலையில் தென்மேற்கு அரபிக் கடலில், நிலைகொண்டுள்ள இந்த அதிதீவிர ‘தேஜ்’ புயல், நேற்று மிகத் தீவிரப் புயலாக வலுப்பெற்றது.

இது நாளை அதிகாலை ஓமன் மற்றும் ஏமனுக்கு இடையே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 24-10-2023

# அரசும் ஆலயங்களும் 2

★ உண்டியலில் சேகரிக்கப்படும் பணம், தனி வங்கிக் கணக்கில் இருக்கும். அந்தந்த மாதம் கோவிலுக்குத் தேவையான செலவுக்கு இந்த தனி வங்கிக் கணக்கில் இருந்து கோவிலுக்கான அன்றாட நடைமுறை வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படும். உண்டியல் பணத்தை கோவில் அதிகாரி நிரந்தர வங்கிக் கணக்கிலேயே வைத்திருப்பார்.

★ வடபழநி ஆண்டவர் திருக்கோவில் உண்டியல் காணிக்கை நிதி தனி வங்கிக் கணக்கில் பல கோடி ரூபாய் இருக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சில பெரிய கோவில்களின் வங்கிக் கணக்கில் பல நூறு கோடி ரூபாய் வரை நிரந்தர வைப்பு நிதியாக இருப்பதையும் நானறிவேன். இப்பணத்தை யாரும் எடுக்கவோ, வேறு பயன்பாட்டிற்கு மாற்றவோ முடியாது. அதற்கு வழியுமில்லை.

★ உண்டியலில் சேகரிக்கப்படும் உலோகங்கள் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு, தங்கம் தனியாக கட்டப்பட்டு கோவில் லாக்கரில் பாதுகாக்கப்படுகின்றன. இவையும் மூன்று அதிகாரிகள் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டு அதற்கான சாவிகள் வெவ்வேறு அலுவலகங்களில் தனித்தனியாக பராமரிக்கப்படுகின்றன. லாக்கரை தனியாகச் சென்று யாரும் திறக்க முடியாது. சாவி பெறுவதற்கே கடும் விதிகளும் நடைமுறைகளும் உள்ளன.

★ ஒரு பக்தர் குறிப்பிட்ட வேண்டுதலுக்காக, அதாவது வேல், கிரீடம் செய்ய தங்கமோ வெள்ளியோ காணிக்கையாக கொடுத்திருந்தால் அவற்றை வேறு காரணங்களுக்காக பயன்படுத்த முடியாது.

★ உண்மை நிலை இவ்வாறு இருக்க ... ஒரு சிலர் அவரவர் கற்பனைச் சிந்தனைக்கு ஏற்றாற்போல உண்டியல் காணிக்கைகள் இந்த அமைச்சருக்கு பத்து சதவிகிதம் போகிறது அந்த அமைச்சருக்கு 10 சதவிகிதம் போகிறது எனச் சொல்வது அவர்களின் அறியாமையன்றி வேறில்லை.

★ ஒரு சிலர் சொல்வதைப் போல கோவில் பணம் வேறு எங்கும் போய்விடாது.

இவை அனைத்தும் ‘தினமலர்’ நிர்வாகி ஆதிமூலத்தின் வாக்குமூலங்கள் தான். உண்டியல் பணம் எவ்வளவு பாதுகாப்பாக கையாளப்படுகிறது என்ற 15 வழிமுறைகளையும் அவர் வரிசைப்படுத்தி இருக்கிறார். இதன்பிறகும் ஒரு கூட்டம், கோவில் நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என்று கூக்குரல் இடுவது அவர்களது சுயநலமே தவிர வேறல்ல.

**“கோவிலை விட்டு அரசே வெளியேறு என்று சொல்லும் மூன்று பேர் கோவில் நிலத்தை ஆக்கிரமித்திருந்தார்கள். அவர்களிடம் இருந்து நிலத்தை மீட்டுள்ளோம்” என்று அறநிலையத் துறை அமைச்சர் சொல்லி இருந்தார். இது தான் இந்த பொய் பிரச்சாரத்துக்கு பின்னால் இருக்கும் உள் நோக்கம் ஆகும்.**

**கோவிலை சுத்தம் செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதும், கோவில் ஓதுவார்களாக பெண்கள் வருவதும், தமிழில் வழிபாடு செய்யலாம் என்பதும் சிலருக்கு எரிச்சலாக இருக்கிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுவதும், கோவில்கள் அனைத்திலும் கேமராக்கள் பொருத்துவதும், அனைத்து ஆவணங்களையும் இணையத்தில் வெளியிடுவதும் சிலரை கோபம் கொள்ள வைக்கிறது. யாரெல்லாம் கோவில் சொத்துகளை ஆக்கிரமித்திருந்தார்கள், யாரிடம் இருந்தெல்லாம் மீட்டுள்ளோம் என்பதை புத்தகமாகப் போட்டு வழங்கி வருகிறார் அமைச்சர் சேகர்பாபு. இது பா.ஜ.க. தலைமை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தான், ‘கோவிலைவிட்டு அரசே வெளியேறு’ என்று கிளம்புகிறார்கள்.**

கோவிலை விட்டு அரசே வெளியேறு என்பதைப் போல மருத்துவ மனைகளை விட்டு அரசே வெளியேறு கல்லூரிகளை விட்டு அரசே வெளியேறு என்று சிலர் கிளம்பினால் என்ன ஆகும்?

கோவில்களை அரசு தான் நிர்வாகம் செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்தவர்களும் பக்தர்கள். மதுரையைச் சேர்ந்த தரும இரண்டன சபை அல்லது அறக்கட்டளை பாதுகாப்புச் சங்கம் என்ற அமைப்பு 1907 முதல் வலியுறுத்திவந்த கருத்து இது. பெரும்பாலும் பார்ப்பன வழக்கறிஞர்கள் இருந்த அமைப்பு இது. இந்த கோரிக்கையைத் தான் பழுத்த பக்தரான அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் 1927 ஆம் ஆண்டு நிறைவேற்றினார்கள். இவர் சமஸ்கிருத பண்டிதர். இந்த சட்டமுன் வடிவை உருவாக்கிக் கொடுத்தவர் அன்றைய சட்ட மன்றத்தின் சிறப்பு உறுப்பினராக இருந்த என்.கோபாலசாமி அய்யங்கார் அவர்கள். இவர் பிற்காலத்தில் பிரதமர் நேருவின் அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்றார். நீதிக்கட்சி காலத்தில் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக (1912-21) இருந்த சர்.டி.சதாசிவ அய்யர் அவர்கள்.

இந்த சட்டத்தை 1948 ஆம் ஆண்டு செம்மைப்படுத்தியவர் அன்றைய முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி அவர்கள். இவர் ரமண மகரிஷியின் சீடர். ஒருநாளைக்கு ஆறு முறை வழிபாடு செய்பவர். பெருந்தலைவர் காமராசர் ஆட்சியில் தான் இச்சட்டத்தில் இருந்த ஒருசில ஓட்டைகள் கூட அடைக்கப்பட்டன. பழுத்த ஆத்திகரான பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் அறநிலையச் சட்டத்தை கடுமையாகக் கடைப்பிடித்தார். இதன் தொடர்ச்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டு வருகிறது.

1927 ஆம் ஆண்டு முதல் இருக்கும் நடைமுறை இது. மாண்புமிகு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பிறகு தான் ஏதோ கோவில்களை அரசு எடுத்துக் கொண்டதைப் போல பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் பேசியது, ‘வாட்ஸ் அப்’ வதந்தி வரலாறே தவிர உண்மை வரலாறு அல்ல.

**பழுத்த ஆத்திகர் எப்போதும் குங்குமப் பொட்டுடன் காட்டியளித்தவர் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலராக இருந்தவர் மறைந்த மரியாதைக்குரிய பெரியவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராசன் அவர்களிடம், “இந்து கோவில்கள் மட்டும் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இருப்பது போல், சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் ஏன் அரசின் வசம் இல்லை?” என்று கேட்டார்கள்.**

**அவர் சொன்னார்: ‘ராஜாங்கங்களும், சமஸ்தானமும் அரசுடமை ஆகியது போல அரசர்கள் கட்டிய கோவில்கள் அரசு வசம் வந்துள்ளது. ஆதீனங்களும், மடங்களும் இன்றும் சுயமாக இயங்குவதைப் போல தனியார்களால் உருவாக்கப்பட்ட சர்ச்சுகளும் பள்ளிவாசல்களும் சுயமாக இயங்குகின்றன’ என்றார். இதை விட வேறு தீர்ப்பு இருக்க முடியுமா?**

உண்மையான பக்தர்களின் கோரிக்கையைத்தான் செயல்படுத்தி வருகிறோம். பகல் வேஷக்காரர்கள் அதனால் தான் பயப்படுகிறார்கள்.

## பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரம்!

### மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு!

*சென்னை, அக். 24 - பூண்டி. சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம் சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாக உள்ளது. இந்த ஏரிக்கு ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையிலிருந்து வரும் கிருஷ்ணா நீர் முக்கிய நீர் ஆதாரமாகும். இங்கு வரும் நீரை அப்படியே இணைப்பு கால்வாய்கள் வழியாக செம்பரம்பாக்கம், செங்குன்றம், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கு அனுப்பி சேகரிக்கப்படுகிறது.*

*இந்த நிலையில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் பூண்டி நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு விவரங்களை அறிந்து கொள்ளும் வகையில் நீர் வளத்துறை அதிகாரிகளுடன் மாவட்ட ஆட்சியர் பிரபுசங்கர் நேரில் பா ணர்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.*

*அப்போது, அங்கு வரைபட உதவியுடன் ஆறுகளின் விவரங்கள், நீர்வரத்து கால்வாய்கள். பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இணைப்பு கால்வாய்கள் மூலம் அனுப்புதல், நீரின் கொள்ளளவு போன்றவை குறித்து நீர்வளத்துறை அதிகாரிகள் விவரமாக எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து நீரின் இருப்பை பார்வையிட்டதோடு, கண்காணிப்பு கேமரா செயல்பாடு குறித்தும் கேட்டறிந்தார்.*

*தொடர்ந்து ஏரியின் மேல் பகுதிகளில் மோட்டார் மூலம் இயங்கும் மதகுகளின் செயல்பாடு. அதன் பராமரிப்பு குறித்த முழு விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். ஏரியின் மொத்தக் கொள்ளளவு 3,231 மில்லியன் கன அடியும். 35 அடி உயரமும் கொண்டதாகும். தற்போதைய நிலையில் 32 அடி உயரமும், 2,241 மில்லியன் கன அடியும் இருப்பு உள்ளது.*

*இதைத் தொடர்ந்து சுற்றுலா தொடர்பான விவரங்களையும், செம்பரம்பாக்கம், செங்குன்றம் ஏரிக்குச் செல்லும் மதகுகள் மற்றும் இணைப்பு கால்வாய்களையும் பார்வையிட்டு அதன் விவரங்களையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது, நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் எம்.பி.சத்ய நாராயணன், உதவி பொறியாளர் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், கழக துணைப்பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி., இலண்டன், கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் 27.10.2023 அன்று நடைபெறவுள்ள பெரியார்–அம்பேத்கர் வாசகர் வட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில்

## தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு வெள்ளிப் பதக்கம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, அக். 24- பாரா ஆசிய விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டு தெரிவித்துள்ளார். ‘தமிழ்நாட்டுக்கும் இந்தியாவிற்கும் மீண்டும் ஒரு முறை பெருமை பாராட்டுகள்’ என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



சீனாவில் உள்ள ஹாங்சோ நகரில் நேற்று முன்தினம் முதல் பாரா ஆசிய விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 28ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவில் இருந்து 303 பேர் (191 வீரர்கள் 112 வீராங்கனைகள்) கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

பாரா உயரம் தாண்டும் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மூவர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

இவர் ஏற்கனவே 2016ஆம் ஆண்டு இரியோ - டி - செனீராவில் நடந்த மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏழாண்டுகளுக்குப் பிறகு தற்போது நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப்பதிவு வருமாறு:-

**பாரா ஆசிய விளையாட்டில் உயரம் தாண்டுதல் T63 பிரிவில் வெள்ளி வென்று தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மீண்டுமொரு முறை பெருமை தேடித்தந்துள்ள நமது மாரியப்பன் தங்கவேலு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்!**

**உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## திருவாரூரில் மாபெரும் பாட்டுமன்றம் - கவியரங்கம் - கருத்தரங்கம்!

*திருவாரூர், அக்25- திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில் கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு பாட்டுமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற விழாவில் சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, மாநில இளைஞர் அணி செயலாளர் ந.இளையராஜா, நகரச் செயலாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர்கள்வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்று சிறப்பித்தனர்.*

*திருத்துறைப்பூண்டி நகரம் ஸ்ரீ கிருஷ்ணா அரங்கில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை ஏற்க, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் மணி வரவேற்புரையாற்றினார்.*

*மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், ஒன்றியச் செயலாளர் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், நகர்மன்றத் தலைவர் திருமதி கவிதா பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வஜெயதேவன், கலைவாணி மோகன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.*

*தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் கோ.பழனி தலைமையில் “அன்றும்... இன்றும்... என்றும்... கலைஞர்” எனும் தலைப்பில் பாட்டுமன்றத்தில் மணப்பாறை லலிதா பரமேஸ்வரி, காரைக்கால் யோகதர்ஷினி, மாஸ்டர் அன்னவாசல் டி.டி.தேவதர்ஷன் ஆகியோர் பங்கேற்றனர். கவிஞர் இள. செல்வமணி, இலக்கிய அணி மாவட்ட துணை அமைப்பாளர் நல்லாசிரியர் செல்லத்துரை ஆகியோர் பங்கேற்ற கவியரங்கமும், கவிஞர் உதயகுமார், வரம்பியம் முகமது முஸ்தாக் ஆகியோர் பங்கேற்ற கருத்தரங்கமும் நடைபெற்றது.*



# ‘நீட்’டுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றிய மசோதா திருப்பி அனுப்பப்பட்டதையே மறைத்துவிட்டு இன்று நம்மை குறைகூறும் பழனிசாமி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை… முதல் பக்கத் தொடர்ச்சி…

நீட் தேர்வுக்கு எதிரான ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையிலும், இதில் நாம் கலந்துகொள்ளவில்லை என்றால், நாம் மக்களால் வெறுக்கப்படுவோம் என்று பிற கட்சிகள் அஞ்சும் வகையிலும் இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

பொறியாளர் அணி செயலாளர் அண்ணன் எஸ்.கே.பி.கருணா அவர்கள், கையெழுத்து இயக்கம் தொடங்குவதற்கு முதல்நாளே ``அடுத்த நீட் நுழைவுத்தேர்வு இன்ஜினியரிங் கல்விக்குத்தான் இருக்கும் என்கிறார்கள். இன்ஜினியரிங், பாலிடெக்னிக் படிக்கும் லட்சக்கணக்கானோரை இந்தக் கையெழுத்து இயக்கத்தில் நாங்கள் கையெழுத்துபோட வைக்கிறோம். இந்தக் கையெழுத்து இயக்கத்தில் பொறியாளர் அணியையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்” என்றார்.

இப்படி ஒவ்வோர் அணியும் இந்தக் கையெழுத்து இயக்கத்தில் இணைந்து செயல்பட ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். உங்களின் இந்த ஆர்வத்தை, செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காகத்தான் இந்தக் கலந்தாலோசனைக் கூட்டம் இங்கு நடைபெற்று வருகிறது.

இளைஞர் அணி நிர்வாகிகள் தற்போது அனைத்து கழக மாவட்டங்களிலும் ‘இல்லந்தோறும் இளைஞர் அணி’ என்ற முன்னெடுப்பின் மூலம் 16 முதல் 35 வயதுள்ளவர்களை அணியில் உறுப்பினர்களாகச் சேர்த்து வருகின்றனர். அப்படி உறுப்பினர் சேர்க்கச் செல்லும்போது, ‘நீட் விலக்கு நம் இலக்கு’ என்ற இந்த முன்னெடுப்புக்கான கையெழுத்துகளையும் இணையதளத்தின் வாயிலாகப் பெறுமாறு அணியின் நிர்வாகிகளை நான் கேட்டுக்கொள்கிறேன்.

### மாணவர் அணியினர் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக கல்லூரிகளில் முகாம் நடத்துங்கள்!

மாணவர் அணி நிர்வாகிகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கலை அறிவியல் கல்லூரிகளிலும் முகாம் நடத்தி ‘மாணவர்களின் நீட் தேர்வுக்கு எதிரான மனநிலையைக் கையெழுத்தாகப் பதிவு செய்ய வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முகாம்கள் தங்குதடையின்றி நடைபெற உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் உதவியையும் நாம் பெறலாம்.

மருத்துவக் கல்லூரி செவிலியர் கல்லூரி மாணவ மாணவிகளிடமும், மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்களிடமும் கையெழுத்துகளைப் பெறும் பொறுப்பைத் தங்களின் நிர்வாகிகள் மூலம் ஒருங்கிணைக்குமாறு மருத்துவ அணியைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மகளிர் சுயஉதவிக் குழுக்கள், குடும்பத் தலைவிகள் - மாணவிகள் ஆகியோரிடம் கையெழுத்து பெறுவதை நம் மகளிர் அணி நிர்வாகிகள் ஒருங்கிணைப்பார்கள்.

### நீட் எதிர்ப்பு இயக்கத்தை அனைத்து அணியினரும் நடத்துங்கள்!

இதேபோல அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அனைத்து வகையான வாகன ஓட்டுநர்களிடமும் கையெழுத்துப் பெறலாம். சிறுசிறு முகாம்கள் நடத்தியோ, ஆட்டோ ஸ்டாண்டு, பேருந்து நிலையங்கள்… போன்ற இடங்களுக்கு நேரில் சென்றோ இந்த நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை நடத்துமாறு அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் நிறுவனங்களின் வளாகத்தில் முகாம் அமைத்து, தொழிலாளர்களிடம் கையெழுத்து பெறுவதைத் தொழிலாளர் அணியும், மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், வர்த்தகர்கள், சிறுபான்மையின மக்கள், வழக்கறிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அயலகத் தமிழர்கள்… என இவர்களின் நலனுக்காக இயங்கக்கூடிய கழக அணிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் கையெழுத்து பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணிக்குக் கூடுதல் பொறுப்பு உள்ளது. கடந்த சில நாட்களாக அவர்கள், புதிய நிர்வாகிகளின் அறிமுகக் கூட்டம், முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட சமூக வலைத்தளத் தன்னார்வலர்கள் கூட்டம் எனப் பரபரப்பாக இருந்தார்கள். தற்போது ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

### ஐ.டி.விங் செயலாளருக்கு அன்பான வேண்டுகோள்!

நீட் தேர்வுக்கு எதிரான இந்த இணையதளத்தில் கையெழுத்து பெறுவதை ஊக்குவித்து, இதை பிரபலப்படுத்துவதற்கு தங்கள் அணி நிர்வாகிகளுடன் கலந்து பேசி `ப்ராசஸ்’ ஒன்றை உருவாக்கித் தருமாறு அமைச்சரும் ஐ.டி.விங் செயலாளருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நிர்வாகிகள் போஸ்ட் கார்டில் கையெழுத்து இட்டாலும், இணையதளத்தில் கையெழுத்து இட்டாலும், கையெழுத்து இடுவதையும், அந்த போஸ்ட் கார்டையும் புகைப்படம் எடுத்து தங்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிருமாறும், அப்படிப் பகிரும்போது இந்த இணையதள லிங்கையும், #BanNEET #நீட்_விலக்கு_நம்_இலக்கு ஹேஸ்டேக்களையும் சேர்த்து பகிருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

### சமூகச் செயல்பாட்டாளர்களின் ஆதரவை வலைதளப் பக்கத்தில் பகிருங்கள்!

அதேபோல மாவட்டங்களில் உள்ள பிரபலங்கள், மக்கள் செல்வாக்குள்ளவர்கள், மரியாதைக்குரிய மனிதர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், திரைக் கலைஞர்கள்விளையாட்டு வீரர்கள் மருத்துவர்கள்… போன்றோரிடம் கையெழுத்து பெறுவதை, புகைப்படம் எடுத்து நம் அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் நம் அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டஒன்றியநகரபகுதி பேரூர் செயலாளர்கள் என நம் கழக நிர்வாகிகள், அணிகளின் மாநிலமாவட்ட நிர்வாகிகள் அனைவரும் கையெழுத்து இடும் புகைப்படங்களை ஹேஸ்டேக் மற்றும் நம் இணையதள இணைப்புடன் அவரவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களில் பகிர, நம் நிர்வாகிகளை ஊக்கப்படுத்துமாறு அமைப்புச் செயலாளர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் கூட சென்னை வில்லிவாக்கத்தில் அண்ணன் தயாநிதி மாறன், அண்ணன் எழிலரசன் உள்ளிட்ட நம் நிர்வாகிகள் கலந்துகொண்ட மாணவர் அணி சார்பில் நடைபெற்ற வேறொரு நிகழ்ச்சியில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்துக்கான அஞ்சல் அட்டைகளை வழங்கி, மாணவர்களிடம் கையெழுத்து பெற்றுள்ளார்கள்.

இதேபோல் நான் கலந்துகொள்ளும் கழக நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தாலும், அதன் ஒரு பகுதியாக இந்தக் கையெழுத்து இயக்கமும் நடத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மற்ற அணி நிர்வாகிகளும் இதை முன்னெடுக்குமாறும், மாவட்டக் கழகம் சார்பில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் இதைப் பின்பற்ற அவர்களை அறிவுறுத்துமாறும் அமைப்புச் செயலாளர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

### இணையத்தின் மூலம் மட்டும் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து!

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகளைப் பெற வேண்டும் என்பது நம் இலக்கு. ஆனால், அதைவிட அதிகமான கையெழுத்துகளை, அதுவும் குறிப்பாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே 50 லட்சத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துகளை நாம் பெற வேண்டும் என்ற இலக்குடன் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## நாம் தொடங்கியுள்ள கையெழுத்து இயக்கம் நாடு முழுவதும் பரவட்டும்!

இந்தப் பணியை தினமும் ஃபாலோ செய்து ஒருங்கிணைத்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

இந்த ஒருங்கிணைப்புப் பணிக்கு அனைத்து மாவட்டக் கழகங்களின் சார்பில் அறிவாலயத்தில் இருந்து ஒருவரும், ஒவ்வொரு அணியில் இருந்தும் அதன் மாநில நிர்வாகி ஒருவரும் என நிர்வாகிகளை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் அவர்களை ஒரு வாட்ஸ்அப் குரூப்பில் இணைத்து, எந்தெந்த மாவட்டம் எத்தனை கார்டுகளைப் பெற்றுச் சென்றுள்ளார்கள், கையெழுத்து இடப்பட்டு எத்தனை கார்டுகள் திரும்ப வந்துள்ளன, இணையதளத்தில் எந்தெந்த மாவட்டம் அதிகமாக கையெழுத்து இட்டுள்ளது, எந்த மாவட்டம் குறைவாக உள்ளது, எந்தெந்த அணி எத்தனை முகாம்களை நடத்தி, அதிகக் கையெழுத்துகளைப் பெற்றுள்ளது, எது குறைவாகப் பெற்றுள்ளது எனத் தகவல்களைப் பெற்று பணிகளை வேகப்படுத்த வசதியாக இருக்கும் என்பதற்காகத் தான் இந்த ஏற்பாடு.

> **இந்த ஒருங்கிணைப்புப் பணிக்கு அனைத்து மாவட்டக் கழகங்களின் சார்பில் அறிவாலயத்தில் இருந்து ஒருவரும், ஒவ்வொரு அணியில் இருந்தும் அதன் மாநில நிர்வாகி ஒருவரும் என நிர்வாகிகளை ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் அவர்களை ஒரு வாட்ஸ்அப் குரூப்பில் இணைத்து, எந்தெந்த மாவட்டம் எத்தனை கார்டுகளைப் பெற்றுச் சென்றுள்ளார்கள், கையெழுத்து இடப்பட்டு எத்தனை கார்டுகள் திரும்ப வந்துள்ளன, இணையதளத்தில் எந்தெந்த மாவட்டம் அதிகமாக கையெழுத்து இட்டுள்ளது, எந்த மாவட்டம் குறைவாக உள்ளது, எந்தெந்த அணி எத்தனை முகாம்களை நடத்தி, அதிகக் கையெழுத்துகளைப் பெற்றுள்ளது, எது குறைவாகப் பெற்றுள்ளது எனத் தகவல்களைப் பெற்று பணிகளை வேகப்படுத்த வசதியாக இருக்கும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.**

### எளிதாக இணையதளம் மூலம் கையெழுத்திடும் வசதியைச் செய்க!

அதேபோல் முகாம்களின் மூலமும், நேரில் சென்று கையெழுத்து பெறுபவர்களும், நீட் தேர்வினால் நம் மாணவர்கள் எந்தெந்த வகையில் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்கூறிய பின் கையெழுத்துப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கையெழுத்து இயக்கத்தைக் களத்திலும் இணையதளத்திலும் ப்ரமோட் செய்ய, சில யோசனைகளும் உள்ளன. இந்த இணையதளத்துக்கான க்யூ ஆர் கோட்ஐ உருவாக்கி, அதை போஸ்டர்களில் பிரின்ட் செய்து, தொகுதிக்கு 500 போஸ்டர்கள் அனுப்பி அவற்றைக் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் கூடும் இடங்களில் ஒட்டலாம்.

அதேபோல இந்த க்யூஆர் கோட்ஐ சமூக வலைத்தளத்துக்காக நாம் தயாரிக்கும் அனைத்து போட்டோ கார்டுகளிலும் சேர்த்து டிசைன் செய்து ப்ரமோட் செய்யலாம். `பாக முகவர்கள் மாநாடு’ போன்று கழகத்தினர் பெருமளவில் கூடும் இடங்களிலும் இந்த க்யூஆர் கோடு ஃப்ளெக்ஸ்களை வைத்து அதன்மூலம் அவர்களையும் கையெழுத்து இட வைக்கலாம். கல்லூரிகள் முன்பு அமைக்கும் முகாம்களிலும் இந்த க்யூஆர் கோட் ஸ்கேன் செய்வதன் மூலம், எளிதாக இணையதளத்துக்குச் சென்று கையெழுத்திடும் வசதியைச் செய்யலாம்.

அதேபோல மிகவும் கவனமுடன் தவிர்க்க வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. வீட்டில் இருந்தபடியே ஒருவரே பல கார்டுகளை வெவ்வேறு பெயர்களில் நிரப்பி, கையெழுத்து இடுவது, ஆட்களை அமர்த்தி வோட்டர் லிஸ்ட்களை வைத்து நிரப்பி கையெழுத்து இடுவது போன்ற எண்ணிக்கைக்காகத் தவறான வழிகளில் கவுன்ட் காட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்று நிர்வாகிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீட் தேர்வை ஒழிக்க, நாம் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவரகளும், முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரும், அ.தி.மு.க.வினர் யாரும் நீட் தேர்வுக்கு எதிராகக் கையெழுத்து போட மாட்டோம். இது நாடகம் என்கின்றனர்.

### அ.தி.மு.க. வினரின் கூற்றை நாம் பொருட்படுத்தத் தேவையில்லை!

நீட்டுக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா திருப்பி அனுப்பப்பட்டதையே வெளியில் சொல்லாமல் நாடகம் நடத்தியவர்கள் அவர்கள்தான். நாம் உண்மையான உணர்வோடுதான் இந்தப்பணியைத் தொடங்கியிருக்கிறோம்.

அதனால்தான் நாம் எல்லோரையும் இந்தக் கையெழுத்தில் பங்கேற்க அழைக்கிறோம். எனவே, மற்றவர்கள் கூறும் குறைகளை எல்லாம் பொருட்படுத்தாமல், நம் மாணவர்களின் கல்வி உரிமையை மனதில் வைத்து நாம் செயல்பட வேண்டும். நீட் தேர்வுக்கு எதிரான இந்தக் கையெழுத்து இயக்கம் இளைஞர் அணி மாணவர் அணிமருத்துவ அணி முன்னெடுத்திருந்தாலும், இதன் வெற்றி என்பது நம் கழகத்துக்கான வெற்றி என்பதை மனதில்கொண்டு அனைவரும் இதில் முழுமையாகப் பங்கெடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆலோனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த அமைப்புச் செயலாளர் அண்ணன் ஆர்.எஸ்.பாரதி அவர்களுக்கும், அணிகளின் அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

முன்னதாக கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை உரையாற்றினார். மருத்துவ அணி செயலாளர் மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி கூறினார்.

---

ஒன்றிய அரசுக்கு மேலும் அழுத்தம் தந்து

# ‘நீட்’ விலக்குப் பெறவே கையெழுத்து இயக்கம்!

## அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி!

சென்னை,அக்.24–

நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம். மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் தேர்வில் இருந்து விலக்கு கிடைக்கும் என்று கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டியில் குறிப்பிட்டார்.



நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் தமிழகம் முழுவதும் நடத்துவது தொடர்பாக காணொலி காட்சி வழியாக ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. திமுக அமைப்பு செயலாளர் ஆர். எஸ் பாரதி தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்பட தி.மு.க. அனைத்து அணி செயலாளர்கள் பங்கேற்றனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமைப்பு செயலாளர் ஆர்.எஸ் பாரதி, நீட் விலக்கு கையெழுத்து இயக்கத்தை தமிழகம் முழுவதும் கொண்டு செல்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாக தெரிவித்தார். இதில் நீட் தேர்வு எதிர்ப்பு எதற்கு என்பது குறித்து விவாதிக்கப் பட்டதாக கூறினார். பா.ஜ.க. ஆட்சி வருவதற்கு முன்பாக 15 லட்சம் வங்கியில் செலுத்தப்படும் என்றும் 2 கோடி பேருக்கு வேலை தரப்படும் என கூறியதை செய்தார்களா? என கேள்வி எழுப்பினார். கடந்த ஆட்சியில் நீதிமன்றத்தில் சரியாக வாதாடாத காரணத்தினால் தான் நீட் விவகாரத்தில் வெற்றி பெற முடியவில்லை என்று கூறிய அவர், ஜெயலலிதா, கலைஞர் ஆகியோர் இருந்தபோது தமிழகத்தில் வராத நீட், அ.தி.மு.க.வால் தான் வந்ததாக குற்றம்சாட்டினார். நீட் விவகாரத்தில் மேலும் அழுத்தம் தருவதற்காகவே நீட் விலக்கு கையெழுத்து இயக்கம் என்றும் ஒன்றியத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நீட் விலக்கு கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக கொடிக்கம்பம் வைக்கக் கூடாது என விதி இருந்தும் சண்டை இழுக்கவே பா.ஜ.க. விதிமுறை மீறி கொடிக்கம்பத்தில் பிரச்சினை செய்வதாகவும், முதலமைச்சர் அவர்கள் மேயராக இருந்த போதே கொடி கம்பங்களை அகற்றியுள்ளதாக கூறினார். திமுக கொடி கம்பம் விதிமுறை மீறி எங்கு இருக்கிறது என கூறினால் அகற்ற தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, கிண்டி தொழிற்பேட்டை சிட்கோ சாலையில் ரூ.3.47 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகல் பணிகளை (21.10.2023) அன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையாளர் டாக்டர். ஜெ ராதாகிருஷ்ணன் நெடுஞ்சாலைத்துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித். (தெற்கு) உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 4வது மண்டல பேச்சு போட்டி கழக சட்டத்துறை இணை செயலாளர் அருள்மொழி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) அன்று மதுரை குறிஞ்சி மகாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை இணை செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணை செயலாளர் பச்சையப்பன்; தலைமை கழக வழக்கறிஞர் சரவணன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசேநன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

## மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு!

மாமல்லபுரம், அக்.24:

தொடர் விடுமுறையை முன்னிட்டு மாமல்லபுரத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தந்து புராதன சின்னங்களை கண்டு ரசித்தனர்.

மாமல்லபுரம் உலக புகழ்பெற்ற சுற்றுலா தலமாக திகழ்வதால் தினமும் 300க்கும் மேற்பட்ட சுற்றுலா வாகனங்களில் ஆயிரக்கணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் வந்து செல்கின்றனர். இந்நிலையில், தற்போது சீசன் காலம் தொடங்கி உள்ள நிலையில், மாமல்லபுரத்திற்கு அதிகளவில் வெளிநாட்டுப் பயணிகள் வருகை தருகின்றனர்.

குறிப்பாக, ஞாயிற்று கிழமை, ஆயுத பூஜை, விஜயதசமி என தொடர் விடுமுறையை முன்னிட்டு மாமல்லபுரத்தில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் அரசு பஸ்களிலும், கார், பைக் உள்ளிட்ட வாகனங்களிலும் கூட்டம், கூட்டமாக வரத்தொடங்கியதால் கடற்கரை கோயில், வெண்ணெய் உருண்டை பாறை ஆகிய புராதன சின்னங்கள் பகுதியில் பயணிகள் கூட்டம் காணப்பட்டது. மேலும், கடலில் குளிக்க வேண்டாம் என கடலோர பாதுகாப்பு படை போலீசார் அறிவுறுத்தியும் ஆபத்தை உணராமல் பலர் கடலில் குளித்தனர்.

வழக்கறிஞர் அருள்மொழி தலைமை! கலைஞர் நூற்றாண்டு விழா!

# மதுரையில் கழக சட்டத் துறை சார்பில் பேச்சுப்போட்டி!

### கழக சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்பு!

*மதுரை, அக். 24 -* முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மூன்றாண்டுகளுக்குட்பட்ட வழக்கறிஞர்களுக்கான 4வது மண்டல பேச்சு போட்டி கழக சட்டத்துறை இணைச் செயலாளர் அருளமொழி தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (22.10.2023) அன்று மதுரை குறிஞ்சி மகாலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன்; துணைச் செயலாளர் பச்சையப்பன்; தலைமைக் கழக வழக்கறிஞர் சரவணன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவநேசன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன், மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவராக வழக்கறிஞர் நன்மாறன் கலந்து கொண்டார்.

இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற சிவகங்கை நீதிமன்ற வழக்கறிஞர் சுமித்ராவுக்கு ரூபாய் 50,000 மற்றும் தங்கப் பதக்கம், சான்றிதழ்; இரண்டாம் பரிசு பெற்ற தேனி நீதிமன்ற வழக்கறிஞர் அற்புதராஜ்க்கு ரூபாய் 25,000 வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்; மூன்றாம் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர் விஜயசாந்திக்கு ரூபாய் 15,000 தாமிரப் பதக்கம், சான்றிதழ்; ஆறுதல் பரிசு பெற்ற மதுரை நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஷர்மிளாவுக்கும், சுபலக்ஷ்மிக்கும் தலா ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற வழக்கறிஞர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

கல்வியை வணிக - மதவெறி மயமாக்குகிறது மோடி அரசு!

# ‘நீட்’ என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதல்!

### ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, அக். 24 - கல்வியை வணிக மத வெறி மயமாக்குகிறது மோடி அரசு என்றும் ‘நீட்’ என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதல் என்றும் ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

23.10.2023 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள தாவது:-

தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை ஞாயிறன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், “ஏதாவது ஒரு குழந்தை நீட் தேர்வுக்கு எதிராக இருக்கிறதா? யாருமே நீட் தேர்வுக்கு எதிராக இல்லை” என கூறியுள்ளார்.

மருத்துவப் படிப்பில் சேர்வதற்கு நீட் நுழைவுத் தேர்வை ஒன்றிய அரசு கட்டாய மாக்கியது. அதனால் தான் மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் 12 ஆம் வகுப்பு முடித்த கையுடன் நீட் நுழைவுத் தேர்வு பயிற்சி மையங்களில் பயின்று தேர்வுகளை எழுதி வருகிறார்கள்.

நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்காக வசதி படைத்த மாணவர்கள் தனியார் நடத்தும் பயிற்சி மையத்திற்கு செல்கிறார்கள். ஒவ்வொரு மாணவரும் குறைந்த பட்சம் ரூ.2 லட்சம் செலுத்த வேண்டியுள்ளது. ஏழைகள் எட்டிப் பார்க்க முடியவில்லை. பயிற்சி மையங்கள் குறைந்தது ரூ.12 ஆயிரம் கோடி வருமானம் ஈட்டுகின்றன.

நீட் தேர்வால் தமிழ்நாட்டைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் தற் கொலை செய்துகொண்டுள்ளனர். இராஜஸ்தானில் நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை (2023)ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 23ஆக உள்ளது. இது கடந்த எட்டாண்டுகளை விட மிக அதிகம்.

நீட் தேர்வால் 2015 ஆம் ஆண்டில் 17 பேர், 2016ல் 16, 2017ல் 7 பேர், 2018ல் 20 பேர் 2019ல் 8 பேர், 2020ல் நான்கு பேர் தற் கொலை செய்து கொண்டுள்ளனர். 2021ல் கொரோனா தொற்று பரவலால் நிறுவனங்கள் மூடப்பட்டன. 2022ஆம் ஆண்டில் 15 பேர் தற்கொலை செய்து கொண் டுள்ளனர்.

நீட்தேர்வால் தற்கொலை நடக்கிறது என்பதை மறைத்துவிட்டு நீட் தேர்வை தமிழகம் ஏற்றுக்கொண்டுவிட்டது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சித்துள்ளார் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை. ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒட்டுமொத்த கல்வித் துறையையும் பெரும் வணிகமாக மாற்றத் துடிக்கிறது. கல்வி என்பது முத லாளித்துவ உலகில் டிரில்லியன் டாலர் வணிகமாக மாற்றப் பட்டு வருகிறது. அதை இன்னும் வேகப்படுத்தும் விதமாக, கல்வியை முழுமையான வணிகமய மாக்குவது; மத வெறி மயமாக்குவது; மாநிலங்களின் அதிகாரங்களைப் பறித்து கல்வியை முற்றிலும் ஒன்றிய அரசின் அதிகார வரம்புக்குள் கொண்டுவருவது ஆகிய மூன்று செயல்திட்டங்களுடன் மோடி அரசு புதிய தேசிய கல்விக் கொள்கையை கொண்டு வந்துள்ளது.

அதன் ஒரு பகுதியாகத் தான் நீட் உள்பட பலவிதமான நுழைவுத் தேர்வுகளை மிகக் கடுமையான முறையில், விடாப்பிடியாக திணித்து, அமலாக்கியுள்ளது. இது கல்வியில் ஜனநாயகத்தை அழித்து, எதேச்சதிகாரத்தின் கொடிய பிடிக்குள் கல்வியை சிக்க வைத்திருக்கும் வியூக மாகும். எனவே நீட் என்பது மாணவர் சமுதாயத்தின் மீதான கொடிய தாக்குதலே!

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



தீக்கதிர்

நீட் : ஒரு பெரும் வணிகம்



பெருநகர சென்னை மாநகராட்சி. கோடம்பாக்கம் மண்டலம், தெற்கு உஸ்மான் சாலை முதல் சி.ஐ.டி.நகர் முதல் பிரதான சாலை வரை ரூ.131 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளின் ஒரு பகுதியாக உலோகத்தால் ஆன பில்லர் (Pillar) மற்றும் பீம் (Beam) நிறுவும் பணியினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், நேற்று (23.10.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி நூர்ஜகான் பேகம்

### அக்டோபர் 24 (2018)



**கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.**

**திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு “நீதிகேட்டு நெடும் பயணம்” சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் “கலைஞர் விருதினை”முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்த

# வாராக்கடன் ரூ.14 லட்சம் கோடியா? ரூ.25 லட்சம் கோடியா?

### ஒன்றிய இணை அமைச்சர் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா?

**பெரு முதலாளிகளுக்கு மோடி அரசு தள்ளுபடி செய்தது ரூ.14 லட்சம் கோடி இல்லை. மோடி அரசு பெரு முதலாளிகளுக்கு தள்ளுபடி செய்தது ரூ.25 லட்சம் கோடி என ஆர்.டி.ஐ. எனப்படும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் ஒரு அதிர்ச்சி தகவல் வீடியோ பதிவு மூலம் சமூக வலை தளங்களில் பரவி வருகிறது.**

அந்த வீடியோ பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஆர்.டி.ஐ. என்று அழைக்கக்கூடிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஒரு அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

வங்கிகள் பெருமுதலாளிகளுக்கு வாராக்கடன் அளித்தது ரூ.14 லட்சம் கோடியா அல்லது ரூ.25 லட்சம் கோடியா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

**கனிமொழி கருணாநிதி எம்.பி.**
**மக்களவையில் கேள்வி!**

கடந்த மழைக்கால கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள், வங்கிகளின் வாராக் கடன் தொடர்பான கேள்வியை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த நிதி துறை இணை அமைச்சர் பகவத் காரத் 2014ஆம் ஆண்டிலிருந்து 2022 - 2023ஆம் நிதியாண்டு வரை 14,56,226 கோடி ரூபாய் வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.




இந்த தகவலை ஒப்பிட்டு ஆர்.டி.ஐ. மூலமாக, உண்மையில் கடந்த 9 ஆண்டுகளில் வாராக்கடன் தள்ளுபடி எவ்வளவு என்று ரிசர்வ் வங்கிக்கு குஜராத்தைச் சேர்ந்த சஞ்சய் என்பவர் மனு அளித்திருந்தார்.

அந்த மனுவுக்கு அளித்த பதிலில், கடந்த 9 ஆண்டுகளில் 25 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி தெரிவித்திருக்கிறது.

**நாடாளுமன்ற மக்களவையில், கேள்வி எண். 2983 என்ற தி.மு.க. எம்.பி. கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நிதித்துறை இணை அமைச்சர் பகவத் காரத் அளித்த பதில் உண்மையா? ரிசர்வ் வங்கி அளித்த பதில் உண்மையா? என்ற அதிர்ச்சி சந்தேகம் நாடு முழுவதும் எழுந்திருக்கிறது.**

இரண்டு தகவல்களுக்குமிடையே இருப்பது ரூ.1கோடி, ரூ.2 கோடி, ரூ.100 கோடி, ரூ.200 கோடியல்ல; 10 லட்சம் கோடி ரூபாய் வித்தியாசம் இருக்கிறது.

பெரு முதலாளிகளுக்கு வாராக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவரத்தை அரசாங்கத்தின் இரண்டு அமைப்புகள் அளிப்பதிலே இவ்வளவு முரண்பாடுகள் ஏன் என்ற கேள்விதான் இப்பொழுது அனைவருக்கும் எழுந்துள்ள ஒரு கேள்வி.

சிறு - குறு - நடுத்தர தொழிலதிபர்கள் வங்கிகளில் கடன் கேட்டால் அவர்களது சொத்துக்களை பிணையப் பத்திரமாக வைத்து, ஆயிரத்தெட்டு கையெழுத்துகளை கேட்டு, கடன்களுக்காக அலைகழிக்கப்படுவதும், அவர்கள் கடன் தொகைகளை செலுத்தவில்லை என்றால் அவர்களது சொத்துகளை ஜப்தி செய்வதும் தொடர் கதையாகிக் கொண்டிருக்கிறது.

சாதாரண விவசாயிகள் டிராக்டர் கடனுக்காக விண்ணப்பித்தால் அவர்களது இல்லங்களுக்கே சென்று அவர்களை அவமானப்படுத்தும் கதையும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பெரு முதலாளிகளுக்கு ரூ.25 லட்சம் கோடி வாராக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பது அனைத்து மக்களிடமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அந்த வீடியோ பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் தெற்கு பகுதி 10வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா பம்மல் மூங்கில் ஏரி,முத்துமாரியம்மன் கோவில் தெருவில் மண்டல குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி, 10வது வார்டு மாமன்ற உறுப்பினர்–தாம்பரம் மாநகராட்சி கணக்கு குழுத் தலைவர் எ.மதினாபேகம் ஆகியோர் வரவேற்புரையில்,10வது வட்ட கழக செயலாளர் எச்.முகமது அப்பாஸ் தலைமையில்,பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள்(ம)செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் குறு – சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் – காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,தலைமை கழக பேச்சாளர் சைதை சாதிக், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். கே.நெப்போலியன்,தலைமை கழக பேச்சாளர் மு.ஏ.முகமது இப்ராகிம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களுக்கு நல்லதிட்ட உதவிகளை வழங்கினார்.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது!

# வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம்!

## சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் பேட்டி!

சென்னை,அக்.24-

தி.நகர் தெற்கு உஸ்மான் சாலையில் அமைக்கப்படும் 1,200 மீட்டர் புதிய மேம்பால பணியை பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த பணிகளை திட்டமிட்டதற்கு முன்பே முடிக்கவும் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக தி.நகர் விளங்குகிறது. வணிக நிறுவனங்கள் பெரும்பாலானவை தி.நகரில்தான் உள்ளன. இதனால், தி.நகரில் எப்போதும் மக்கள் கூட்டம் அலைமோதும். சாதாரணமாக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களிலேயே தி.நகர் வணிக வீதிகளில் மக்கள் கூட்டம் அதிகரித்து காணப்படும். அதுவும் பண்டிகை காலங்கள் நெருங்கிவிட்டால் சொல்லவே வேண்டாம்.

துணிகள் எடுக்கவும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கவும் தி.நகரை நோக்கி மக்கள் கூட்டம் அலைமோதும். சாரைசாரையாக எங்கு பார்த்தாலும் தி. நகரில் மக்கள் கூட்டமாகத்தான் பண்டிகை நெருங்கும் நாட்களில் காணப்படும். இதனால் வாகன போக்குவரத்து நெரிசலும் அதிகமாக இருக்கும். இதனால் தி. நகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது குறித்து சென்னை மாநகராட்சி ஆலோசித்து வருகிறது.

அந்த வகையில், சென்னை தியாகராயநகர் தெற்கு உஸ்மான் சாலையில் இருந்து அண்ணா சாலை சி.ஐ.டி. நகர் 1வது மெயின்ரோடு மற்றும் சி.ஐ.டி. நகர் 4வது மெயின் ரோடு வரை ரூ.131 கோடி செலவில் மேம்பால கட்டுமான பணி நடந்து வருகிறது. இந்த புதிய மேம்பாலம் 1200 மீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட உள்ளது. அதாவது 1.2 கி.மீட்டர் தூரத்திற்கு அமைகிறது. 8.40 மீ அகலத்தில் அமைக்கப்படுகிறது இந்த மேம்பாலம்.

இந்த மேம்பால பணிக்கு கட்டுமான பணிகளில் புதிய முறையை சென்னை மாநகராட்சி பயன்படுத்தி இருக்கிறது. இதில், பாலத்துக்கான தூண்களை இரும்பை கொண்டு அமைக்கும் பணியை சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. தெற்கு உஸ்மான் சாலையில் இருந்து பர்கிட் சாலை மற்றும் மேட்லி சுரங்கப்பாதை சந்திப்பு, தெற்கு உஸ்மான் சாலையில் இருந்து தென்மேற்கு போக் சாலை மற்றும் புதிய போக் சாலை சந்திப்பு, சிஐடி நகர் முதல் மெயின் சாலை மற்றும் சிஐடி நகர் வடக்கு சாலை சந்திப்பு ஆகிய 3 சந்திப்புகளையும் இணைக்கும் வகையில் இந்த பாலம் அமைக்கப்பட உள்ளது.

இந்த மேம்பாலம் அமைத்தால் தி நகரில் ஓரளவு போக்குவரத்து நெரிசல் குறையும். மேம்பால பணிகளை பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இந்த பணிகளை அடுத்த ஆண்டு செப்டம்பருக்குள் முடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், தான், அதற்கு முன்னதாகவே முடித்திடும் வகையில் பணிகளை விரைந்து மேற்கொள்ள அதிகாரிகளை ஆணையர் ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

தற்போது பணிகள் வேகமாக நடைபெற்று வருவதாகவும் இதே வேகத்தில் பணிகள் நடைபெற வேண்டும் என்றும் அதிகாரிகளை அறிவுறுத்தினார். இதன்படி, இந்த மேம்பால பணிகள் திட்டமிட்டதற்கு முன்பாகவே அதாவது அடுத்த ஆண்டு செப்டம்பருக்கு முன்பாக திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மேம்பாலம் பயன்பாட்டுக்கு வரும் பட்சத்தில் தி.நகரில் போக்குவரத்து நெரிசல் ஓரளவு குறையும் என்பதால் வாகன ஓட்டிகளும் பாலம் விரைவில் திறக்கப்பட வேண்டும் எதிர்பார்க்கின்றனர்.

மேலும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

# மழை வெள்ளப் பாதிப்பு!

## போலீசார் விழிப்புணர்வு!

சென்னை, அக்.24-

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னையில் அசம்பாவிதங்களை தடுப்பதற்கும், மீட்பு பணிகளுக்காகவும் 12 காவல் மாவட்டங்களில் பேரிடர் மீட்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மீட்புக் குழுவுக்கும் ஒரு தலைமை காவலர் தலைமையில் 10 காவலர்கள் உள்ளனர். ஒவ்வொரு மீட்பு குழுவுக்கும் மீட்பு பணிகளுக்காக தலா ஒரு வாகனம், ரப்பர் படகு, மிதவை, ஜாக்கெட்கள், கயிறு உள்ளிட்ட 21 மீட்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த குழு, அந்தந்த பகுதிகளில் உள்ள காவலர்களுடன் இணைந்து பணியாற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அந்த வகையில், புளியந்தோப்பு காவல் சரகத்திற்கு உட்பட்ட கொடுங்கையூர், வியாசர்பாடி, எம்கேபி நகர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி, கொடுங்கையூர் எழில் நகரில் நேற்று நடந்தது. புளியந்தோப்பு சரக துணை கமிஷனர் ஈஸ்வரன் தலைமை வகித்தார். எம்கேபி நகர் உதவி கமிஷனர் தமிழ்வாணன், கொடுங்கையூர் இன்ஸ்பெக்டர் சரவணன் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் கொருக்குப்பேட்டைதீயணைப்புத் துறையினர் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

### என்.சந்திரன் முன்னிலையில்

# 167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## ஜெ.நடராஜன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, அக்.24-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்துார் தெற்குப் பகுதி, 167வது வட்ட பாக முகவர்கள் கூட்டம் பகுதிச் செயலாளர் என்.சந்திரன் முன்னிலையில் வட்டச் செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான, தா.மோ. அன்பரசன் அறிவுறுத்தலின் படி, ஆலந்துார் தெற்கு பகுதி செயலாளரும், 12-வது மண்டல குழு தலைவருமான, என்.சந்திரன் முன்னிலையில், 167-வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில், 22.10.2023 அன்று நங்கநல்லூர் 44-வது தெருவில் உள்ள ராஜ்குமார் சுலோக்சனா பள்ளியில் பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோடீஸ்வரன் சிறப்புரையாற்றினார். இதில் 167-வது வார்டு மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், பாகம் 355 மற்றும் பாகம் 356 ஆகிய பாகத்தை சேர்ந்த உறுப்பினர்கள், நலச்சங்க நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்ட சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, அக். 24 -

இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்ட சாதி வாரி கணக்கெடுப்பு அவசியம் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

23.10.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-





இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டவும், வளர்ச்சியின் பலன்களை மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு கொண்டு செல்வதற்கும் சாதிவாரி கணக்கெடுப்பு மிகவும் அவசியமாகும். சாதி தொடர்பான தரவு, உள்ளீடுகளை கொண்டே சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டிட முடியும். இட ஒதுக்கீட்டில் ‘உள் ஒதுக்கீடு’ விவகாரங்களில் ஒரு தெளிவினை பெற முடியும். ஒரு மாநிலத்தில் அதன் தாய்மொழி பேசுவோர் எத்தனை சதம் உள்ளனர், பிற மொழி பேசுவோர் அங்கு எத்தனை சதம் வாழ்கின்றனர் என்பதை சாதி வாரி கணக்கெடுப்பின் மூலம் கண்டுணர முடியும். சாதி வாரியான கணக்கெடுப்பு இந்திய அளவில் எடுக்கப்பட்டால் மட்டுமே, இன்ன சாதிக்கு விகிதாச்சார அடிப்படையில் இவ்வளவு இட ஒதுக்கீடு என்பதை உணர்த்திட இயலும். மேலும் வாய்ப்பு கிடைக்காத சாதிகளுக்கும் கூட கணக்கெடுப்பு அடிப்படையில் பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

இந்தியாவை பொறுத்தவரை 1931ம் ஆண்டு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. கடந்த 90 ஆண்டுகளில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. இக்காலக்கட்டத்திற்குள் நம் நாட்டின் மக்கள் தொகை மற்றும் சமூக பொருளாதார நிலப்பரப்பு பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. ஆனால், சமூகத்தின் பின்தங்கிய பிரிவினர் இன்னமும் பின்தங்கிய நிலையிலே உள்ளனர். பீகார் போன்ற சில மாநில அரசுகள் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பை வெற்றிக்கரமாக நடத்தி முடித்துள்ளன. பீகாரின் சாதி வாரி கணக்கெடுப்பின்படி மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 36 சதவீதம் அங்கு உள்ளனர். ஆனால், ஒன்றிய அரசின் 90 செயலாளர்களில் 3 பேர் மட்டுமே ஓபிசி வகுப்பை சேர்ந்தவர்களாக உள்ளனர். எனவே, இந்தியாவின் சாதி புள்ளி விபரங்களை வைத்து ‘அதிக மக்கள் தொகை, அதிக உரிமைகள்’ என்பதை கொண்டு வர வேண்டும் என ராகுல்காந்தி கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் சொற்ப எண்ணிக்கையில் இருப்பவர்கள் அதிகாரங்களை அனுபவித்து வருவதும், திரளாக இருப்பவர்கள் இன்னமும் பின்தங்கிய நிலையில், சமூகத்தில் அந்தஸ்து கிட்டாமல் இருப்பதும் உண்மை. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது, சமூக, பொருளாதார தரவுகள் சேகரிக்கப்பட்டாலும், சாதி வாரியான விபரங்கள் பெறப்படவில்லை. இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை கொண்டு செல்லவும், ஒடுக்கப்பட்ட மக்கள் உரிய பிரதிநிதித்துவம் பெறவும் சாதி வாரியான துல்லியமான கணக்கெடுப்புகள் இப்போது தேவையாக உள்ளது. இந்தியாவில் 2021க்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு இன்னமும் நடைபெறவில்லை. விரைவில் நடக்க உள்ள தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்போடு, சாதி வாரியான கணக்கெடுப்பினை இணைத்து நடத்திட வேண்டும் என பல மாநிலங்களும் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைத்து வருகின்றன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதுகுறித்து பிரதமர் மோடிக்கு கடிதமும் எழுதியுள்ளார். சாதி தொடர்பான தரவு உள்ளீடுகளுடன் இந்திய சட்டபூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு மட்டுமே சமூக நீதியை நிலை நிறுத்துவதற்கான பொருத்தமான தளமாக இருக்கும். இதன்மூலம் சமூகத்தின் சாதி அமைப்பு மற்றும் சமூக பொருளாதார விழுமியங்களை நாம் நேரடியாக பெறுவதோடு, விரிவான, நம்பகமான தகவல்களையும் பெறலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கில் கலைஞர் நூற்றாண்டு விழா பொது மருத்துவ முகாம்!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ – நா.சந்திரபாபு பங்கேற்பு!

சென்னை, அக். 24 -

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அப்போலோ மருத்துவமனையின் மாபெரும் பொது மருத்துவ முகாம் 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் சமுதாய கூடத்தில் நடைபெற்றது .

அப்போலோ மருத்துவமனை சார்பாக நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் உயரம், எடை, ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு, அதன்பிறகு மருத்துவர் பரிசோதனை, மருத்துவர்கள் பரிந்துரையின்படி இலவசமாக மருந்து மாத்திரைகள் ஆகியவை வழங்கப்பட்டன.

மேலும் இ.சி.ஜி., எக்கோ ஆகிய பரிசோதனைகள் தரமாக இலவசமாக செய்யப்பட்டது.

அப்பாசாமி கண் மருத்துவமனையின் மூலமாக கண் சிகிச்சை வேண்டுபவருக்கு கிட்ட பார்வை துரப்பார்வை பரிசோதனை செய்து, குறைபாடு உள்ளவர்கள்அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டார்கள். மேலும் எழுத்து வடிவில் தெரியாதவர்களுக்கு இலவசமாக படிக்கும் கண்ணாடி மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் 300க்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றனர்.

பரிசோதனை செய்து கொண்ட அனைவருக்கும் போர்வை மற்றும் பிஸ்கட் பாக்கெட்டுகள் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் டாக்டர் சந்திரபாபு, தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

17 வது வட்ட கழக செயலாளர் கே.கருணா கரன் தலைமையில், சி. மூர்த்தி, சி.பாலாஜி முன்னிலையில் நடைபெற்றது.

சி.அருணாசலம், எஸ். கோபாலகிருஷ்ணன், எச். பீர்முகமது, எஸ்.சிவகுமார், முத்துவேல், எம்.என்.அஜய் தென்னவன், எஸ்.சண்முகப்ரியன், டி.வினோத், ஜி.ராஜ்குமார், எஸ்.நாகராஜன், மணலி புதுநகர் வழக்கறிஞர் பி.கே.கண்ணன், எத்திராஜ், சின்னத்தோப்பு ஜி.முனிவேல், ஜி.செல்வம், செட்டிமேடு டி.திவாகர், தீயம்பாக்கம் எம்.ஜான்சன், இ.சுதர்சன் பூபாலன், வடபெரும்பாக்கம் என்.நாகராஜன், டாக்டர் மைக்கேல், பி.செந்தில், மாதவன், வக்கீல் எம்.என்.தளபதி, சசிகுமார், ரவீந்தர், விநாயகபுரம் கமல், சின்னத்தோப்பு ஜி.செல்வம், ஜி.நாகராஜ், ஏழுமலை, கொசப்பூர் விஜயன், தினகரன், முருகன், சசிகுமார், தியாகி விஸ்வநாததாஸ் நகர் குமார், கலைமணி, சுரேஷ், ஜி.சுரேஷ், குமார், இழந்தனூர் சிவப்பிரகாஷ், மணலி புதுநகர் டோமினிக், செமின் எடிசன், குளக்கரை கிருபாகரன், மஞ்சுநாதன் மற்றும் பலர் திரளாக கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் அப்போலோ மருத்துவமனையின் மாபெரும் பொது மருத்துவ முகாம் 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. அப்போலோ மருத்துவமனை சார்பாக நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் உயரம், எடை, ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரை அளவு, மருத்துவ பரிசோதனை, மருத்துவர்கள் பரிந்துரையின்படி இலவசமாக மருந்து மாத்திரைகள் ஆகியவை வழங்கப்பட்டன. இம்முகாமை மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் நா.சந்திரபாபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மணவிழா வரவேற்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு!

# சென்னையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மகள் திருமண விழா!

## நாளை நடைபெறுகிறது!

சென்னை, அக். 24- அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் இல்ல திருமண விழா நாளை சென்னையில் நடைபெறுகிறது. இன்று நடைபெறும் வரவேற்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்கள். அமைச்சர்கள், தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்கின்றனர்.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவில் அருகே முட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - செந்தமிழ்ச் செல்வி தம்பதியினரின் மகள் டாக்டர் கண்மணிக்கும், சென்னை கீழ்ப்பாக்கத்தைச் சேர்ந்த நீதியரசர் திலகவதி - கார்த்திக் தம்பதியினரின் மகன் டாக்டர் சித்தார்த் ஆகியோருக்கும் திருமணம் திருவான்மியூர் ஸ்ரீராமச்சந்திர கன்வென்ஷன் சென்டரில் நாளை (25ம் தேதி) காலை 9 மணிக்கு நடைபெறுகிறது.

இன்று மாலை 6 மணியளவில் நடக்கும் திருமண வரவேற்பு விழாவில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

திருமண நிகழ்ச்சியில் அமைச்சர்கள், எம்எல்.ஏ.க்கள், தி.மு.க. தலைமை நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.

முன்னதாக கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளரும் எம்.ஆர்.கே.கல்வி குழுமங்களின் தலைவருமான எம்.ஆர்.கே.பி.கதிரவன் அனைவரையும் வரவேற்கிறார்.

# ஆசிரியர் பணி நியமனத்துக்கான வயது வரம்பு உயர்வு!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 24- அனைத்து வகை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்வதற்கான உச்ச வரம்பு நிர்ணயம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித்துறை அரசு செயலாளர் குமரகுருபரன் வெளியிட்டுள்ள அரசாணை வருமாறு : -

பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் ஆசிரியர் பணியிட நேரடி நியமனத்துக்கான உச்ச வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 40 என்றும், இதர பிரிவினருக்கு 45 வயது என்றும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிறகு இதில் திருத்தம் செய்யப்பட்டு 1.1.2023 முதல் பொதுப் பிரிவினருக்கு 42, இதர பிரிவினருக்கு 47 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நிலையில், கடந்த 4ம் தேதி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்ட அறிவிப்பில், ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று ஆசிரியர் பணிக்காக காத்திருப்போருக்கு உச்ச வயது வரம்பு பொதுப்பிரிவினருக்கு 53, இதரப் பிரிவினருக்கு 58 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பை அடுத்து பள்ளிக் கல்வி இயக்குநர் தமிழ்நாடு அரசுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பின் படி உச்ச வயது வரம்பு நிர்ணயித்து உரிய அரசாணை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் கேட்டுக் கொண்டார்.

இதன்படி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பை செயல்படுத்தும் விதமாகவும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, பள்ளிக் கல்வித்துறையின் கீழுள்ள ஆசிரியர்களின் நேரடி நியமனத்துக்கான உச்ச வயது வரம்பை பொதுப் பிரிவினருக்கு 53 என்றும், இதர பிரிவினருக்கு 58 என்றும் நிர்ணயித்து தமிழ்நாடு அரசு ஆணை வெளியிடுகிறது.

இவ்வாறு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 765 மாவட்டங்களில்

# மோடி அரசை விளம்பரப்படுத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிப்பதா?

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம்!

புதுடெல்லி, அக். 24- அடுத்தாண்டு மக்களவை தேர்தல் நடைபெற உள்ளதால் மோடி அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், மாவட்டந்தோறும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று ஒன்றிய நிதி அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அரசின் உத்தரவு நகலை இணைத்து டிவிட்டரில் கார்கே நேற்று முன்தினம் பதிவிடுகையில், ‘மோடி அரசின் 9 ஆண்டு சாதனையை விளக்குவதற்கு நாடு முழுவதும் 765 மாவட்டங்களில் சிறப்பு அதிகாரிகளை நியமிக்க நிதி அமைச்சகம் சார்பில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதில், இணை செயலாளர், இயக்குனர்,துணை செயலாளர் அந்தஸ்திலான அதிகாரிகள் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இது சிவில் சர்வீஸ் விதிகள் 1964 ன் பிரிவை மீறுவதாகும். குறிப்பிட்ட அந்த விதியின்படி அரசியல் விஷயங்களில் அதிகாரிகள் தலையிடக்கூடாது. அரசின் திட்டங்களை கொண்டாடுவது மற்றும் அதனை காட்சிப்படுத்துவது கட்சி தொண்டர்களின் பணியாகும். இந்த பணிக்கு அதிகாரிகளை அனுப்பினால் அடுத்த 6 மாதங்களுக்கு அரசு இயந்திரம் முடங்கி விடும். ஜனநாயகத்தையும்,அரசியல் சட்டத்தையும் பாதுகாக்க இந்த உத்தரவுகளை அரசுஉடனே வாபஸ் பெற வேண்டும்’ என குறிப்பிட்டுள்ளார்.







M.R.K இல்லத் திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர்
திரு M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,
அவர்களின் இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமணவிழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர்
அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
திரு. உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
தலைமை கழக நிர்வாகிகளையும்,
மாவட்ட கழக செயலாளர்களையும்,
முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர்களையும்,
கழக சார்பு அணி நிர்வாகிகளையும்,
தோழமைக் கட்சி தலைவர்களையும், இன்னாள், முன்னாள்
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும்,
உள்ளாட்சி பிரதிநிதிகளையும்
கழக முன்னோடிகளையும், மற்றும்
ஆன்றோர்கள் - சான்றோர்கள், நண்பர்கள்
அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கின்றோம்...
வரவேற்பு: 24.10.2023 செவ்வாய்க்கிழமை,
மாலை 6.00 மணி
மண நாள்: 25.10.2023 புதன்கிழமை,
காலை 9.00 - 10.30 மணி
இடம்: ஸ்ரீ ராமச்சந்திரா
கன்வென்ஷன் சென்டர்
திருவான்மியூர், சென்னை - 41
SARAN Arts
தங்க.ஆனந்தன்
ஒன்றிய கழக செயலாளர், திருமுட்டம் கிழக்கு
கடலூர் கிழக்கு மாவட்டம்


பெருந்தலைவர்
M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர,
பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
95 000 515 37
த.சங்கர்
ஒன்றிய கழக செயலாளர்
ஒன்றிய குழு உறுப்பினர்
க.பழனி
பேரூராட்சி மன்ற தலைவர்
பேரூர் கழக செயலாளர்
அண்ணாமலை நகர்
குமராட்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க
கடலூர் கிழக்கு மாவட்டம்



மணமக்கள்
Dr. M.R.K.P. கண்மணி M.D.,
Dr. K.சித்தார்த் M.D.,

வரவேற்பு : 24.10.2023
செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

மணநாள் : 25.10.2023
புதன்கிழமை காலை 9.00 - 10.30 மணி

இடம் : ஸ்ரீ ராமச்சந்திரா
கன்வென்ஷன் சென்டர்,
திருவான்மியூர், சென்னை.





# M.R.K. இல்லத் திருமண விழா



எனது இளைய மகள்
Dr. M.R.K.P. கண்மணி M.D., - Dr. K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு

# முதலமைச்சர்

அவர்களையும்

மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணிச் செயலாளர்

# உதயநிதி ஸ்டாலின்

அவர்களையும்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்,
தலைமை கழக நிர்வாகிகளையும், மாவட்ட கழக செயலாளர்களையும், முன்னாள் ஒன்றிய, மாநில அமைச்சர்களையும், கழக முன்னோடிகளையும், தோழமைக் கட்சி தலைவர்களையும், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளையும், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி பிரதிநிதிகளையும், மற்றும் ஆன்றோர்கள் - சான்றோர்கள், நண்பர்கள் அனைவரையும் வருக! வருக!!

என அன்புடன் வரவேற்கும்

## M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., BL.,

வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் – மாவட்டக் கழகச் செயலாளர்

# கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.


பெருந்தலைவர்
M.R.K இல்லத் திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,MLA., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D.,- Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞநலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்,
கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் கழக சார்பு அணி நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
M.R.K.P.கதிரவன்
மாவட்ட கழக பொருளாளர், கடலூர் கிழக்கு
V.R.ராஜேந்திரகுமார் மத்திய ஒன்றிய கழக செயலாளர்
தி.ப.ம.சோழன் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்
வே.கோவிந்தசாமி வடக்கு ஒன்றிய கழக செயலாளர்
N.K.நடராஜன் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்
J.M.அன்வர் சதாத் லால்பேட்டை பேரூர் கழக செயலாளர் பேரூராட்சி மன்ற து.தலைவர்
குமராட்சி ஒன்றியம் - கடலூர் கிழக்கு மாவட்டம்


M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
மாண்புமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,M.L.A., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர,
பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
ஏ.எஸ்.மதியழகன் ஒன்றிய கழக செயலாளர் புவனகிரி (மே)
K.R.ராயரி ஒன்றிய கழக செயலாளர் கம்மாபுரம் (தெ)
டாக்டர் எம்.மனோகரி ஒன்றிய கழக செயலாளர் புவனகிரி (கி)
புவனகிரி சட்டமன்ற தொகுதி தி.மு.க - கடலூர் கிழக்கு மாவட்டம்
95 000 515 37 சிதம்பரம்


M.R.K இல்ல திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்,
மாவட்ட கழக செயலாளர் கடலூர் கிழக்கு
திருமிகு. M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,M.L.A., அவர்களின்
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி M.D., Dr.K.சித்தார்த் M.D.,
ஆகியோரின் திருமண விழாவிற்கு வாழ்த்த வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத்தலைவர் அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும்
மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர,
பேரூர் கிளை கழக நிர்வாகிகள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்...
இரா.கலையரசன்
ஒன்றிய கழக செயலாளர்
பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க - கடலூர் கிழக்கு மாவட்டம்
95 000 515 37 சிதம்பரம்


M.R.K. இல்லத்திருமண விழா
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்
கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர்
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc.,B.L.,
இளைய மகள்
Dr.M.R.K.P.கண்மணி,M.D.,
Dr.K.சித்தார்த்,M.D.,
வரவேற்பு: 24.10.2023
செவ்வாய்க்கிழமை
மணநாள்: 25.10.2023
புதன்கிழமை காலை 9.00 -10.00 மணி
இடம்: ஸ்ரீ ராமச்சந்திரா
கன்வென்ஷன் சென்டர்
திருவான்மியூர், சென்னை
மணமக்களை வாழ்த்த வருகை தரும்
கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களையும்
மாண்புமிகு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
கழக இளைஞர் அணி செயலாளர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் | தலைமை கழக நிர்வாகிகள்
மாவட்ட செயலாளர்கள் | கழக முன்னோடிகள் | தோழமைக் கட்சி தலைவர்கள் இந்நாள், முன்னாள்
நாடாளுமன்ற | சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆன்றோர் - சான்றோர்கள் | நண்பர்கள்
அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
K.S.ராஜா
கடலூர் மாநகர கழக செயலாளர்
சுந்தரிராஜா B.A.,
கடலூர் மாநகராட்சி மேயர்
கடலூர் மாநகர தி.மு.க | கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க

# ‘நீட்’ விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



தேனி அருகே வீரபாண்டியில், தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவர் அணி, மாணவரணி, இளைஞரணி சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்ய வலியுறுத்தி கையெழுத்து இயக்க துவக்க நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சிக்கு தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் தலைமை வகித்தார். பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ சரவணக்குமார், மாணவரணி அமைப்பாள வக்கீல்.ஸ்டீபன்,இளைஞரணி அமைப்பாளர் ஆஜிப்கான் முன்னிலை வகித்தனர். மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.பாண்டியராஜன் வரவேற்றார். இதில் திமுக உயர்மட்ட செயல்திட்ட குழு உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பொன்முத்து ராமலிங்கம் கலந்து கொண்டு நீட்ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார். இந்நிகழ்ச்சியில் மாணவரணி மாநில துணை செயலாளர்கள் வி.ஜி. கோகுல், அதலை செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் பிடி. செல்லப் பாண்டியன், மாவட்ட துணை செயலாளர் ராசிசெந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் தேனி தெற்கு ரத்தினசபாபதி, தேனி வடக்கு சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ராஜாரமேஷ், நகர செயலாளர்கள் தேனி நாராயணபாண்டியன், போடி புருசோத்தமன், பெரியகுளம் முகமதுஇலியாஸ், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதாசசி, வீரபாண்டி பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் ஏராளமான மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவரணி மற்றும் மருத்துவரணி சார்பில், ‘நீட் விலக்கு நம் இலக்கு’ 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., செ.இராமலிங்கம் எம்.பி., சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மருத்துவர் யாழினி, சுப.தமிழழகன், ராஜா, பிரபு சீனிவாசன், வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற நம்முடைய கல்வி உரிமைக்கான கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க கையெழுத்து இயக்கத்தை கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி மூலம் துவக்கி வைத்தார். இதையடுத்து வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் தலைமைக் கழக செய்தி தொடர்பு குழு துணை செயலாளர் சையத் ஹபீஸ் சித்திக், மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் ஆ.பிரபு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன், மாவட்ட அவைத்தலைவர் கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முனைவர் வரத.ராஜசேகர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் ‘நீட் விலக்கு, நம் இலக்கு’ என்ற மக்கள் இயக்கத்தை கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் முன்னிலையில் தொடங்கி வைத்ததையடுத்து மயிலாடுதுறை மாவட்டத்தில் மாணவ, மாணவிகளிடம் மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தொடங்கி வைத்தார்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ரூ.308.75 கோடியில்

# கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்க கட்டுமானப் பணி!

## தலைமைச் செயலாளர் ஆய்வு!

சென்னை, அக்.24-

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ரூ.308.75 கோடி மதிப்பில் கட்டடப்பட்டு வரும் கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்க கட்டட கட்டுமானப் பணிகளையும், நெடுஞ்சாலைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால்வாய், கால்வாய் தூர்வாரும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டு நிறுவனத்தால் ரூ.308.75 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கத் திட்டப் பணிகளான கூடுதல் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்கத்திற்கான கட்டுமானப்பணி உள்ளிட்ட விரிவாக்கப் பணிகளை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த வர்த்தக மையத்தில் 9,00,000 சதுர அடிபரப்பளவில் ரூ.308.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 4000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு அரங்கம் மற்றும் 5 பொருட்காட்சி அரங்கங்கள், 1300 வாகனங்கள் நிறுத்தும் வசதி கொண்ட பன்னடுக்கு வாகன நிறுத்தம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த தலைமைச் செயலாளர் அவர்கள், வேலையாட்களின் எண்ணிக்கையை அதிகரித்து திட்டப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**நெடுஞ்சாலைத்துறை – மழைநீர் வடிகால்வாய் பணி**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் அவர்கள் நெடுஞ்சாலைத்துறை சார்பில் கிண்டி தொழிற்பேட்டை சிட்கோ சாலையில் ரூ.3.47 கோடி மதிப்பில் 360 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணியினையும், ஈக்காட்டுத்தாங்கலில் ரூ.5.50 கோடி மதிப்பில் 556 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும், அரும்பாக்கம் பகுதியில் ரூ.5.80 கோடி மதிப்பில் 660 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினையும், அண்ணா சாலை டி.எம்.எஸ். சந்திப்பில் ரூ.2.77 கோடி மதிப்பில் 315 மீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால்வாய் மற்றும் வடிகால் தொட்டி அமைக்கும் பணி மேம்பாலத்தின் கீழ் அழகுபடுத்தும் பணி.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் காந்தி இர்வின் சாலை சந்திப்பு - சென் ஆன்ரூஸ் சர்ச்சில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதி ரூ.1.40 கோடி மதிப்பில் கட்டடப்பட்டுள்ள மழைநீர் வடிகால் தொட்டியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர், காந்தி இர்வின் சாலை சந்திப்பில் மாநில பேரிடர் மேலாண்மை நிதி ரூ.1.90 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, பாந்தியன் சாலை மேம்பாலத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அழகு படுத்தும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, கனேசபுரம் சுரங்கப்பாதை யில் மூலதன நிதி ரூ.2.40 கோடி மதிப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இரயில்வே துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர்வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாகவும், தரமாகவும், முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**நீர்வளத்துறை கால்வாய் தூர்வாரும் பணி**

நீர்வளத்துறை சார்பில் விருகம்பாக்கம் கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணியினையும், திரு.வி.க.நகர் மண்டலம், அம்பேத்கர் சாலையில் ஓட்டேரி நல்லா கால்வாயில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலர்/ ஆணையாளர் டாக்டர். ஜெ ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குனர் சந்தீப் நந்தூரி, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டி.ஜி.வினய், இணை ஆணையர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி.அமித் (தெற்கு), பிரவீன் குமார், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மற்றும் வர்த்தக மையம், நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, மாநகராட்சி தலைமைப் பொறியாளர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உலகில் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை!

## ஆய்வு அறிக்கையில் தகவல்!

சென்னை, அக்.24: -

உலகின் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை இடம்பெற்றுள்ளதாக, ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் குற்றச்சம்பவங்களை தடுக்க போலீசார் பல்வேறு நடவடிக்கை எடுத்தாலும், பல்வேறு நகரங்களில் கொலை, கொள்ளை, வழிப்பறி உள்ளிட்ட குற்றங்களும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளும் நாள்தோறும் நடந்துகொண்டே தான் இருக்கின்றன.

இந்தியாவின் மற்ற பெருநகரங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை எப்போதும் மிகவும் பாதுகாப்பான நகரம்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை! இந்தியாவில் பெண்கள் வேலை பார்க்க, மிகவும் பாதுகாப்பான நகரங்களின் பட்டியலை, கடந்த ஜனவரி மாதத்தில் தனியார் ஆய்வு நிறுவனம் ஒன்று வெளியிட்டது.

பாதுகாப்பு சூழல், போக்குவரத்து வசதி பணி வாய்ப்புகள், சமத்துவம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆய்வின் பட்டியலில் முதலிடம் பிடித்த நகரம் சென்னை, அத்துடன், முதல் 11 இடங்களில் கோவை, மதுரை ஆகிய நகரங்களும் இடம்பிடித்து இருந்தது. இந்நிலையில், தற்போது உலகிலேயே மிகவும் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலிலும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது சென்னை.

இந்தியாவில் பல்வேறு நகரங்களில் பணியாற்றியுள்ள வடமாநிலத் தொழிலாளர்களும், அண்டை மாநிலத்தைச் சேர்ந்த பலரும் சென்னையில் வசித்து வருகின்றனர். அவர்கள் அனைவருமே, இந்தியாவின் மற்ற நகரங்களை விட, சென்னையில்தான் மிகவும் பாதுகாப்பாக உணர்வதாக கூறுவதுண்டு, அதை தேசிய குற்ற ஆவணக் காப்பக அறிக்கை உறுதி செய்துள்ள நிலையில், தற்போது உலகளாவிய சேப்டி இன்டெக்ஸ் என்ற கணக்கிடும் உறுதிப்படுத்தியுள்ளது.

உலகில் மிகவும் பாதுகாப்பான நகரங்கள் குறித்த 2023ம் ஆண்டுக்கான அறிக்கையை செர்பியாவை சேர்ந்த NUMBEO என்ற ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ளது. உலகம் முழுவதும் 334 நகரங்களை உள்ளடக்கிய இந்த பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்திருப்பது, சட்டத் திட்டங்களை கடுமையாக வைத்திருக்கும் ஐக்கிய அரபு அமீரகத்தை சேர்ந்த அபுதாபி மற்றும் அஜ்மாள் ஆகிய நகரங்கள் தான்.

மூன்றாவது இடத்தை கத்தாரின் தோஹா பிடித்துள்ள நிலையில், முதல் 10 இடங்களில் எந்த இந்திய நகரங்களும் இடம் பெறவில்லை. ஆனாலும், 40வது இடத்தை கர்நாடக மாநிலத்தை சேர்ந்த மங்களூருவும், 76வது இடத்தை குஜராத் மாநிலம் வதோதராவும், 82வது இடத்தை அதே மாநிலத்தைச் சேர்ந்த அகமதா பாத்துமே பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில், சூரத் 94வது இடத்தையும், நவி மும்பை 105வது இடத்தையும் பிடித்திருந்தாலும், இவை எதுவுமே பெருநகரங்கள் இல்லை.

அதே நேரத்தில், பாதுகாப்பு அளவீட்டில் 60 சதவீதத்தையும், குற்ற அளவீட்டில் 40 சதவீதத்தையும் கொண்டுள்ள சென்னை, 127வது இடத்தை பிடித்துள்ளது. அதன் அடிப்படையில், மிகவும் பாதுகாப்பான இந்தியாவின் பெருநகரம் அதாவது மெட்ரோ நகரம் என்று பார்த்தால், அது சென்னை தான். இதற்கு அடுத்த இடத்தில்தான், இந்தியாவின் பிற மெட்ரோ நகரங்களான மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, டெல்லி உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

**குற்ற சம்பவங்களில் டெல்லி முதலிடம்**

இந்தியாவில் குற்றங்கள் அதிகம் நடைபெறும் நகரங்கள் என்ற பட்டியலில் முதலிடம் பிடித்திருப்பது நாட்டின் தலைநகரான டெல்லி 2வது இடத்தை நொய்டாவும், 3வது இடத்தை குர்கானும் பிடித்துள்ளன. உலக அளவில் குற்றங்கள் அதிகம் நடைபெறும் நகரங்கள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது. வெனிசுலா நாட்டின் கராகஸ் நகரம், முதல் 10 இடங்களை பிரேசிலை சேர்ந்த 4 நகரங்களும், தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 3 பகுதிகளுமே பிடித்துள்ளன. முதல் 100 இடங்களில் 72வது இடத்தை டெல்லியும், 93வது இடத்தை நொய்டாவும் பிடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், எப்போதும் பதற்றமாக இருக்கும் பாகிஸ்தானின் கராச்சி 96வது இடத்தை பிடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அர. நடராசன்

**அக்டோபர் 24 (1987)**



**இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# மத அடையாள தேசம்:
# உருவாகிவிட்ட யூத இஸ்ரேலும் - இந்துத்துவம் உருவாக்க விரும்பும் இந்து இந்தியாவும்!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**அறுபதுகள், எழுபதுகளில் கோடை விடுமுறை என்றால் ‘டென் கமாண்ட்மென்ட்ஸ்’ (Ten Commandments, 1956) படத்தை திரையரங்குகளில் திரையிடுவார்கள். பள்ளி மாணவர்களை பெற்றோர் கூட்டிச் செல்வார்கள் என்பதால். எகிப்தில் அடிமைகளாக இருந்த யூதர்களை மோசஸ் கடவுளின் துணையுடன் விடுவித்து அவர்களுக்கு கடவுளால் வாக்களிக்கப்பட்ட நிலமான இஸ்ரேலுக்கு கூட்டிச் செல்வதுதான் கதை. மோசஸ் குழந்தையாக ஆற்றில் விடப்பட்டு எகிப்து இளவரசியால் கண்டெடுக்கப்பட்டு, அரச குடும்பத்தில் வளர்வார், கர்ணனைப் போல. பின்னர் உண்மைவெளிப்பட்டு, நாட்டைவிட்டு துரத்தப்படுவார். அலைந்து திரிந்து சினாய் மலையில் ஏறி கடவுளின் குரலைக் கேட்பார். கடவுள் கட்டளைப்படி எகிப்து சென்று மன்னருடன் வாதாடி, பலவித உற்பாதங்களைத் தோற்றுவித்து, பெருந்திரளான அடிமைகளுடன் வெளியேறுவார். அவர்கள் செங்கடலை நெருங்கும்போது மன்னனின் படைகள் துரத்திக்கொண்டு வரும். மோசஸ் கோலை உயர்த்த செங்கடல் இரண்டாகப் பிரிந்து வழிவிடும். இந்தக் காட்சிக்கு அரங்கில் பெரும் கரவொலி எழும்பும். அந்தக் கடல் பிரிந்து கொடுத்த வழியில் யூதர்கள் கடந்து அக்கரை சென்றபின், துரத்திக்கொண்டு வரும் மன்னனின் படைகள் அதில் இறங்கியவுடன் கடல் மூடிக்கொண்டு அவர்களை மூழ்கடித்துவிடும். இப்படி யாகத் தப்பி வந்த மக்களுக்கு மோசஸ் மூலமாக பத்து கட்டளைகளை கடவுள் கொடுப்பார். அதன்படி வாழ்ந்தால் அவர்**




**களுக்கு வாழ்வதற்கு ஒரு நிலத்தைத் தருவதாகக் கூறுவார். அப்படி வாக்களிக்கப்பட்ட நிலம், Promised land என்பதுதான் இஸ்ரேல் என்று இப்போது அழைக்கப்படும் பாலஸ்தீனம் என்பது புராணம், நம்பிக்கை.**

யூதர்களின் டோரா, பைபிள் உள்ளிட்ட மத நூல்களில் குறிப்பிடப்படும் இந்த கதைக்கு வரலாற்று ஆதாரம் எதுவும் கிடையாது. கிடைத்துள்ள வரலாற்று ஆதாரங்களின்படி சிந்தித்தால் அப்படியெல்லாம் நடந்திருக்கும் சாத்தியம் அதிகமாக இல்லை. ஆனால், ஏசு கிறிஸ்து பிறந்த நேரத்தில், கிறிஸ்துவ மதம் தோன்றிய நேரத்தில் யூதர்கள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்தார்கள் என்பது உண்மை. கிறிஸ்து பிறப்புக்கு பிறகான நானூறு, ஐந்நூறு ஆண்டுக் காலத்தில் அவர்கள் அங்கிருந்து வெளியேறி ஐரோப்பா முழுவதும் பரவி பல்வேறு நாடுகளில் வசிக்கத் தொட ங்கினார்கள். பாலஸ்தீனத்தில் வாழ்ந்த அரேபியர்கள் பெருமளவு இஸ்லாமிய மதத்தை தழுவினார்கள்.

பொது ஆண்டு 500 முதல் பொது ஆண்டு 1900 வரை பல்வேறு நாடுகளில் வாழ்ந்த யூதர்கள் பாலஸ்தீனம்தான் சொந்த ஊர் என்று எண்ணி வந்தார்கள் என்று கிடையாது. அவர்கள் குடியேறிய நாடுகளில் வர்த்தகம் செய்தும், வட்டித் தொழில், வங்கித்தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும் வாழ்ந்தார்கள். ஆனால் இவர்களுக்கும், பொது சமூகத்துக்கும் இடைவெளியும், முரண்பாடுகளும் நிலவி வந்ததும், யூதர்களுக்கு எதிரான வன்முறை, சமூக விலக்கம், கட்டாய வெளியேற்றம் ஆகிய அவ்வப்போது நிகழ்ந்ததும் உண்மைதான். இதன் உச்சகட்டமாகத்தான் ஹிட்லரால் லட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட கொடூர சம்பவம் இரண்டாம் உலகப் போர் நேரத்தில் நிகழ்ந்தது.




### புராணத்தை வரலாற்றாக்கிய தீர்வு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே யூதர்களுக்கென ஒரு நாடு தேவை என்ற எண்ணம் உருவாகத் தோன்றியது. கடவுள் யெஹோவாவால் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி எனப்படும் இஸ்ரேல்/பாலஸ்தீனம்தான் அது என்ற சிந்தனையும் உருவானது. இந்த சிந்தனையால் பல்வேறு நாடுகளில் வசிக்கும் யூதர்களுக்கும் அவர்கள் பல தலைமுறைகளாக பார்த்தே இராத, நினைத்தே இராத பாலஸ்தீனம் அவர்களது சொந்த ஊர், உரிமையுள்ள நிலம் என்ற எண்ணம் உருவாகத் தொடங்கியது. இதன் உச்சமாகத்தான் இஸ்ரேல் என்ற நாடு இங்கிலாந்தால் உருவாக்கப்பட்டதும், உலகின் பல பகுதிகளிலிருந்தும் யூதர்களுக்கு அந்த நாட்டுக்கு “திரும்பி வரும் உரிமை” (Right to Return) வழங்கப்பட்டதும் நடந்தது. அதாவது எத்தனையோ தலைமுறைகளாக ஃபிரான்சிலோ, அமெரிக்காவிலோ வாழ்ந்து வரும் வம்சாவழியைச் சேர்ந்த யூதர் ஒருவர் இஸ்ரேலுக்குச் சென்று குடியேற நினைத்தால் அது ‘திரும்பிச் செல்வதாக’க் கருதப்படும்.




**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

இந்த முரண்பாட்டை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், இலங்கையின் மலையகத் தமிழர்களை யோசித்துப் பாருங்கள். அவர்கள் நூறு முதல் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தேயிலைத் தோட்ட த்தில் வேலை செய்ய தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்களின் வம்சாவழிகள்தான். அவர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்கு ‘திரும்பி வரும் உரிமை’ கோர முடியுமா? சாஸ்திரிசிரிமாவோ 1964 ஒப்பந்தத்தின்படி திரும்ப வர ஏற்கப்பட்டவர்களிலேயே பலர் தமிழ்நாட்டுக்கு வந்த பின்னும் குடியுரிமை இல்லாமல் அவதிப்பட்ட கதை பேசப்பட வேண்டியது. இப்படி நன்றாக அறியப்பட்ட வரலாற்றில் இடம் பெயர்ந்தவர்களின் சந்ததியருக்கே திரும்பி வரும் உரிமை இல்லாதபோது, எத்தனையோ நூற்றாண்களுக்கு முன்னால் சென்றிருக்கலாம் என யூகி க்கப்படுபவர்களின் சந்ததியருக்கு ‘திரும்பி வரும் உரிமை’ வழங்குவது எவ்வளவு முரண்பாடானது.

### இஸ்ரேல் நாட்டினை எதிர்க்கும் சனாதன யூதர்கள்

**சனாதனம் என்றால் மாறாதது என்று பலரும் கூறுவதை சமீப காலங்களில் கேட்டுள்ளோம். அதனால் மாற்றங்களை விரும்பாதவரை சனாதனி என்று கூறுகிறோம். பொதுவாக இவர்கள் பிற்போக்காளர்களாக இருப்பார்கள். ஆனால், யூதர்கள் விஷயத்தில் ஒரு சுவாரஸ்யமான முரண் ஏற்படுகிறது. யூத மத நம்பிக்கையில் ஒரு பகுதி கடவுளின் கட்டளைகளை யூதர்கள் பின்பற்றாததால், அவர்களுக்குத் தருவதாகச் சொன்ன பூமி வழங்கப்படவில்லை என்பதாகும். அதனால் அவர்கள் பல்வேறு நாடுகளிலும் வாழ்வதுதான் சரியே தவிர, தங்களுக்கென ஒரு நாடு என இஸ்ரேலை உருவாக்கியதும், அந்த நிலத்திலிருந்து பாலஸ்தீனியர்களை அகற்றியதும் தவறு என்பது சனாதன யூதர்களில் ஒரு பிரிவினரின் கருத்து.**

யூதர்களின் சம்பிரதாயப்படி ஆண்கள் தாடி வளர்த்து கறுப்பு ஆடையும், கறுப்புத் தொப்பியும் அணிய வேண்டும். அவ்வாறு மத வழக்கத்தை தீவிரமாக பின்பற்றும் சனாதன யூதர்கள் இஸ்ரேலுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி நியூயார்க்கில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதை நான் பலமுறை கண்டுள்ளேன். நீங்களும் இங்கே இணைக்கப்பட்டுள்ள படத்தில் காணலாம். பல நேரம் இவர்கள் ‘JEWS AGAINST OCCUPATION’ என்ற பதாகையையும் பிடித்திருப்பர். அதாவது இஸ்ரேல் நாடு என்பது பாலஸ்தீனியர்களின் நிலத்தை ஆக்கிரமித்துள்ளது என்பதே பொருள். கீழேயுள்ள படத்தில் டோரா என்ற யூதர்களின் புனித நூல் பாலஸ்தீனம் முழுவதையும் பாலஸ்தீனியர்களின் இறையாண்மைக்கு விட்டுவிட வேண்டும் எனக் கூறுவதாக ஒரு பதாகையை ஏந்தியுள்ளதைக் காணலாம்.



**இந்தியாவில் சனாதனிகள் இப்போது மிகுந்த ஆவேசத்துடன் சனாதன எதிர்ப்பாளர்களைக் கண்டித்துப் பேசுகிறார்கள். சனாதனம் என்றால் அது வர்ணாசிரம தர்மம் அல்ல, தீண்டாமை அல்ல என்று சொல்கிறார்கள். அவர்களெல்லாம் இது போல “ஜாதி மறுப்பே சனாதனம்”, “வர்ண பேதம் கடவுளுக்கே அடுக்காது”, “உங்கள் ஜாதிக்குள் திருமணம் செய்யாதீர்கள்”, “ஜாதிக்குள் திருமணம் செய்ய கட்டாயப்படுத்துவது அதர்மம்”, “பார்ப்பனர்கள் யாருக்கும் உயர்ந்தவர்கள் அல்ல”, “சனாதனம் ஜாதீயத்தை எதிர்க்கிறது”, “தீண்டாமை என்பது கொடிய பாவம்” என்றெல்லாம் பதாகைகளைப் பிடித்துக்கொண்டு ஊர்வலம் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அதுவும் விபூதி, திருமண் முதலிய சின்னங்களை நெற்றியில் அணிந்து, குடுமி வைத்தவர்கள் இப்படியெல்லாம் பதாகைகளை**



**ஏந்தி வந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் இவர்கள் செய்வதில்லை. சனாதனம் என்றால் இதுதான், சனாதனம் என்றால் அதுதான் என்று வாயினால் பசப்புகிறார்களே தவிர, திட்டவட்டமாக களத்தில் இறங்கி ஜாதி மறுப்பு பிரச்சாரம் செய்வதில்லை. சனாதன யூதர்களைப் பாருங்கள். பாலஸ்தீனத்தை விடுவியுங்கள். பாலஸ் தீனியர்களிடம் இறையாண்மையைக் கொடுங்கள் என்று திட்டவட்டமாக கோருகிறார்கள்.**

### இந்துத்துவத்தின் புண்ணிய பூமி கருத்தாக்கம்

யூதர்களுக்கு கடவுள் வாக்களித்த பூமி இஸ்ரேல் என்று சொன்னதால் எப்படி தேசம் என்ற நவீன அரசியல் அடையாளம், மதத்துடன் பிணைந்து கொண்டதோ, அது போன்றதுதான் சாவர்க்கர் புண்ணிய பூமி என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியதும். உண்மையில் இந்துத்துவத்தின் சாராம்சமே அதுதான். அதன்படி யார் ஒருவரின் புண்ணிய தலங்கள் இந்திய எல்லைக்குள் இருக்கிறதோ அவர்தான் இந்தியர். முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களின் புண்ணிய தலங்கள் இந்தியாவுக்கு வெளியே இருப்பதால் அவர்கள் இந்தியாவின் முழுமையான குடிமக்கள் கிடையாது. இவ்வாறு நாட்டின் குடியுரிமையை மதம் என்பதுடன் பிணைப்பதுதான் மத அடையாள தேசியம் ஆகும். அரசாங்கம் அதிகாரபூர்வ மதமாக ஒரு மதத்தை ஏற்பது என்பது கூட பிரச்சினை கிடையாது. குடியுரிமையை, குடிநபரின் வரையறையை மதம் என்பதுடன் இணைப்பதுதான் கடுமையான பிரச்சினை. ஆங்கிலத்தில் தேசம் என்ற வார்த்தையை ‘நேஷன்’ என்று கூறுகிறோம். இதன் மூலச் சொல்லத்தீன் மொழியில் பிறப்பினை குறிப்பதாகும். ஒருவரின் பிறப்பு சார்ந்ததே அவரது தேசம் என்பது.

உதாரணமாக அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் என்பவர் இருக்கிறார். இவரின் தாயார் சியாமளா சென்னையில் பிறந்தவர். தந்தை ஜமைக்காவில் பிறந்தவர். ஆனால், கமலா அமெரிக்காவில் பிறந்ததால் அந்த நாட்டின் குடிநபர் ஆகிறார். அதனால்தான் அவர் தேர்தலில் போட்டியிட முடிகிறது. துணை அதிபராக முடிகிறது. அமெரிக்காவில் பல இந்து கோயில்களைக் கட்டியுள்ளார்கள். இந்து மதத்தினரும் அங்கே அதிபர் தேர்தலில் பங்கேற்கிறார்கள். இங்கிலாந்து நாட்டின் பிரதமராக ஒரு இந்து, ரிஷி சுனக் இருக்கிறார். அவர் காசியை புண்ணிய தலமாக நினைத்தால் அது குறித்து இங்கிலாந்தில் யாரும் கவலைப்படவில்லை. மதத்துக்கும் குடியுரிமைக்கும் இந்த நாடுகள் முடிச்சுப் போடவில்லை.

ஆனால் சாவர்க்கரின் இந்துத்துவம் முடிச்சுப் போடுகிறது. இந்தியாவை புண்ணிய பூமியாகக் கொள்ளாதவர்கள் இந்திய குடிமக்களாக இருக்க முடியாது என்ற கருத்தை அது விதைக்கிறது. இஸ்ரேலின் அடிப்படையான மோசஸ் கதைபோல சாவர்க்கர் ராமாயணத்தைப் பயன்படுத்துகிறார். ராமர்தான் இந்தியாவை ஒரே நாடாக இணைத்தவர் என்று கூறுகிறார். ராமாயணம் ஒரு புராணக்கதையாகும். ஆதாரபூர்வமாக நிறுவப்பட்ட வரலாறு அல்ல. மேலும் வால்மீகி ராமாயணத்தில் குறிப்பிடப்படும் இலங்கை என்பது மத்தியப் பிரதேசத்தில் இருப்பதாகக் கருதும் ஆய்வாளர்கள் பலர் இருக்கிறார்கள்.

**புராணத்தை வரலாறாக ஆக்குவதிலும், மதத்தை தேசமாக ஆக்குவதிலும் இஸ்ரேலின் முன்மா திரிக்கும், இந்துத்துவ சிந்தனைக்கும் நிறைய ஒப்புமைகளைக் காணலாம். உள்ளபடி சொன்னால் குடியுரிமை சீர்திருத்தச் சட்டம் என்பது ஒருவகையில் இந்துக்களின் “திரும்ப வரும் உரிமை” எனலாம். பிற நாடுகளில் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் ஒருவர் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டால் கொடுப்பதற்கான விதிமுறைகளை வகுக்காமல், இந்துக்களாக இருந்தால் குடியுரிமை வழங்கலாம், இஸ்லாமியர்கள் என்றால் முடியாது என்றெல்லாம் விதிமுறைகள் வகுப்பது குடியுரிமையையும், மதத்தையும் இணைக்கும் செயல் என்பதால்தான் போராட்டங்கள் வெடித்தன.**

இந்துத்துவ அணியினரின் வெளிப்படையான இஸ்ரேல் ஆதரவு என்பது, முஸ்லிம்களை பொது எதிரியாக காண்பதிலிருந்து, பலவகையான தொடர்பு புள்ளிகளைக் கொண்டது என்றே நினைக்கத் தோன்றுகிறது. இஸ்ரேல் மேலும் வலுப்பெறுவது இந்துத்துவர்களின் வேலை திட்டத்தை ஊக்கப்படுத்தவே செய்யும். ‘மதமே தேசம்! புராணமே வரலாறு’ என்ற முழக்கத்துக்கு இஸ்ரேல் மிகவும் அனுசரணையான சிறந்த முன்மாதிரியாகும்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் இளைஞர் அணி, மாணவரணி மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னிலையில் “புன்னகை” கல்வி மாத இதழ் ஆசிரியர் திருஞானம் துவக்கி வைத்தார். நிகழ்வில் இளைஞர் அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா, மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், மருத்துவ அணி மாவட்ட தலைவர் மாரிமுத்து, ஆவின் ஆறுமுகம், பூங்கோதை ஆலடி அருணா, ஆறுமுகசாமி செல்லத்துரை, ஷெரிப், கென்னடி, சிவக்குமார், ஐவேந்திரன் தினேஷ்,கிருஷ்ணராஜ், முஹம்மது அப்துல் ரஹீம், சுப்பிரமணியன், ராஜா, சுப்பையா, கார்த்திகா உள்பட கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.




சென்னை வட கிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாதவரம் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள், தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சோழவரத்தில் ஒன்றியக் கழகச் செயலாளரும், ஒன்றிய துணை பெரும் தலைவருமான மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, டாக்டர் நா.சந்திரபாபு ஆகியோர் பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் மாநில இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்பேரில் தமிழகத்திற்கு நீட்தேர்விலிருந்துவிலக்கு அளிக்கக்கோரி குடியரசுத் தலைவரை வலியுறுத்தும் 50லட்சம் அஞ்சல் அட்டை அனுப்பும் கையெழுத்து இயக்கத்தினைகூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். இதில் தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, மாநில மாணவரணி இணைச்செயலாளர் பூரணசங்கீதா, காரைக்குடி நகர்மன்றத்தலைவர் சே.முத்துதுரை ஆகியோர் பங்கேற்றனர்.




கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி,மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் 'நீட் விலக்கு நம் இலக்கு' என்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் முன்னிலையில் சென்னை தெற்கு சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் துவக்கி வைத்தார். உடன் இளைஞர் அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன், மருத்துவ அணி அமைப்பாளர் கணேஷ் ராஜா, மாலை ராஜா,லட்சுமணன்,சுப்பிரமணியன், சரவணன், ராஜ், சுரேஷ், தர்மன், மீரான் மைதீன், நமச்சிவாயம் உள்பட கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட

# ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி தொகுதிகளின் BLA 2 ஆய்வு கூட்டம் !

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமை! ஆர்.டி.இ.ஆதிசேசன், பழ.கணேசன் பங்கேற்பு

திருவள்ளூர் அக் 24;

திருவள்ளூர் கிழக்கு ஒன்றியத்குட்பட்ட 25வேப்பம்பட்டு, 26 வேப்பம்பட்டு , அயத்தூர் சார்பில் , பாகம் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் சே.பிரேம் ஆனந்த் ஏற்பாட்டியல் நடைபெற்றது. எஸ்.ஜெயபாலன், பா. நரேஷ்குமார் ஒன்றிய நிர்வாகிகள் க.ஜெயராமன், ராஜா, ஞா.ரமேஷ், குட்டி (எ) பக்த்தவசலு, இ.என். சேகர் , இம்மன்வெல் ஆர். திலிப் ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இதில் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் பழ.கணேஷ் பங்கேற்று பல்வேறு ஆலோசனை வழங்கினார். இதில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் குமரேசன், சரவணமூர்த்தி, ராமானுஜம், ராஜேஷ், மோதிஷ் ஜித்து, முருகன் பாஸ்கர், ஆனந்த , பா.ஆதவன், பக்கம் பார்த்திபன், சுரேஷ், ஒன்றிய அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , பாகமுகவர்கள், பாகம் உறுப்பினர்கள்,கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டார்கள் .

அதேபோல் ஆவடி தொகுதிகுட்பட்ட ஆவடி கிழக்கு பகுதி திமுக சார்பில் பாக BLA2 BLC ஆய்வு கூட்டம் பகுதி செயலாளர் பேபிசேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ. வினோத், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாநகர மேயர் ஜி.உதயகுமார் முன்னிலை வகித்தார்கள். இக்கூட்டத்தில் ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் பாக முகவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் அமுதா சேகர், ஜான், வெங்கடேசன், டிசோஷா, ராஜி, சக்திவேல், குருவான், பாண்டியன், நாகராஜ், செல்வம், கோபால், பிரபுவேல், சுதாகர், கிருஷ்ணமூர்த்தி, தினா, ராஜ்குமார், முத்து, விமல், டேனியல் உள்பட பலர் பங்கேற்றனர்.

திருவள்ளூர் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பெருமாள் பட்டு , புட்லூர் , காக்களூர் ஆகிய ஊராட்சியில் பாக முகவர்கள் BLA 2 BLC ஆய்வு கூட்டம் ஒன்றிய செயலாளர் காக்களூர் ஆர்.ஜெயசீலன் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் த.எத்திராஜ், கே. கே.சொக்கலிங்கம், தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம், டி.கே.சீனிவாசன், டி.எம். ராமச்சந்திரன், பரமேஸ்வரன், தயாளன், எஸ்.என்.குமார், வி.தியாகராஜன், எஸ். சௌந்தரராஜன், த.சுகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் பழ.கணேசன் கலந்துகொண்டு பாக முகவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போது பணிகள் மேற்கொள்ள வேண்டுவது என பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இதில் லாசர், டி.கே.பூவண்ணன், ஜெய்சங்கர், சிவாபிரகாஷ், இயேசு பாலன், ஸ்ரீதர், சரவணன், ராஜினி, செந்தில், சதீஷ், கார்த்தி, சேது உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி 30(அ) வட்டத்தின் சார்பில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாம் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. பயனாளிகளுக்கு இலவச மருந்துகள் வழங்கி மற்றும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. ரத்ததானம் வழங்கியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. உடன் பகுதி கழக செயலாளர் ஜி.துக்காராம், மெரிடியன் மருத்துவமனை தலைவர் அந்தோணி ராஜரத்தினம், மற்றும் மாமன்ற உறுப்பினர் திருமலை ஜி. துரைசாமி எம்.சி., திருமதி. குணசுந்தரி குட்டி மோகன் எம்.சி. மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் எம்.சரவணன், துரை ஸ்ரீராமுலு, மருத்துவர் அணி என்.எம்.டி. கோபல், ஜி.பார்த்தசாரதி, ராஜேஷ் மற்றும் எஸ்.என்.ராஜ்6, சீனிவாசன், ஏ.வி.முருகன், தயாளன், நரேந்திரன், ஹபீப் ரகுமான், வெங்கட்ராமன் கருணாநிதி, காஞ்சி சண்முகம், டி.வி.எஸ்.கோபி, பாஸ்கர் மற்றும் பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை வட்டக் கழக செயலாளர் டி.சுந்தரம் செய்திருந்தார்.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க சார்பில்

# ஆவடி, பூவிருந்தவல்லி தொகுதிகளுக்கான பாக முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்டபட்ட ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் 29-10-2023 அன்று காலை 9 மணி அளவில் திருமுல்லைவாயில் டைமண்ட் திருமண மண்டபத்திலும், பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் 30-10-2023 அன்று மாலை 3:30 மணி அளவில் பூவிருந்தவல்லி எஸ்.வி.வி. மஹாலிலும், நடைபெறுகிறது.

அது சமயம் மாவட்ட அவைத்தலைவர் மா.ராஜி தலைமை வகிக்கிறார் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணாசாமி, தொகுதி பார்வையாளர்கள் ஆர்.டி.இ.ஆதிசேசன், பழ.கணேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜே.ரமேஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், கு.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள் கூட்டம் முன்னதாக மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் வி.பேபிசேகர், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் ஆகியோர் வரவேற்புரையாற்றுகிறார்கள். மேற்படி கூட்டத்தில் ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பாக முகவர்கள் கூட்டம் அறிவித்த தேதிகளில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


**ஆவடி சா.மு.நாசர்** எம்.எல்.ஏ .

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.


# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி














இலட்சிய நடிகர்

## எஸ்.எஸ். இராஜேந்திரன் Ex. MP

24-10-2014

இன்றும், என்றும் இதயம் நிறைந்த நினைவுடன்....

**எஸ்.எஸ்.ஆர். இராஜேந்திரகுமார் Ex. MP**

மற்றும் குடும்பத்தினர்

எஸ்.எஸ்.ஆர் பங்கஜம் சினிமாஸ், சாலிகிராமம்,

திரையரங்க வளாகத்தில் இன்று 5000 பேருக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும்.



மணமக்கள்
Dr.M.R.K.P.கண்மணி M.D.,
Dr.K.சித்தார்த் M.D.,
வரவேற்பு : 24 – 10 – 2023,
செவ்வாய்கிழமை, மாலை 6 மணி
மணநாள் : 25 – 10 – 2023,
புதன்கிழமை, காலை 9 – 10.30 மணி
இடம் : ஸ்ரீ ராமச்சந்திரா கன்வென்ஷன்
சென்டர், திருவான்மியூர், சென்னை
கடலூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர்
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்
M.R.K.பன்னீர்செல்வம் B.Sc., BL.,
அவர்களின் இல்லத் திருமண விழாவை தலைமையேற்று
நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்த வருகை தரும்
பாசமிகு கழகத் தலைவர் – மாண்புமிகு
தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களையும்
கழக இளைஞர் அணிச் செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களையும்
தி.மு.க.– தலைமை கழக நிர்வாகிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள்,
உள்ளாட்சி பிரதிநிதிகள், தோழமை கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக
முன்னணியினர் அனைவரையும் வருக.. வருக... என
அன்புடன் வரவேற்கிறோம்...
வணங்கி வரவேற்கும்...
கோ.ஐயப்பன் M.A., M.L.A.
கடலூர் சட்டமன்ற உறுப்பினர்
Dr.பிரவின் ஐயப்பன் M.S., ( Ortho )

# நாடு நலம் பெற பாடுபடும் வர்க்கம் பயன் பெற..!





■ நீரை.மகேந்திரன்

**1967**-ஆம் ஆண்டில், வாக்குச்சீட்டு மூலம் தமிழ்நாட்டில் நிகழ்ந்த அரசியல் புரட்சியை, 1971-ஆம் ஆண்டிலும் நிகழ்த்திக் காட்டின கலைஞரின் வாக்குறுதிகள். எனினும் அரசியல் சதுரங்க ஆட்டங்களில், 1977-ஆம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தல் மிக முக்கியமான பின்னடைவை தமிழ்நாட்டுக்கு உருவாக்கிவிட்டது.

அந்தத் தேர்தலின்போது தி.மு.க வெளியிட்ட தேர்தல் அறிக்கை இவ்வாறு பேசுகிறது:

“ தி.மு.கழகம் ஒரு மாநிலக் கட்சி என்றாலும், அகில இந்திய உணர்வுடனும், கண்ணோட்டத்துடனும் டெல்லி சர்வாதிகாரத்தை எதிர்த்து நடந்து முடிந்த இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தில் தனது கடமையைத் துணிவுடன் செய்து, அதற்கான மகத்தான விலையைக் கொடுத்திருப்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

நாஜிக்களின் கெஸ்டபோ ரகசிய போலீஸ் ஜெர்மானிய மக்களுக்கு அளித்த மனோரீதியான தொல்லைகளைப் போல, ரோம் சாம்ராஜ்யத்து கிறிஸ்தவர்களைப் போலவும், தென்னாப்பிரிக்கக் கருப்பர்களைப் போலவும் நிந்திக்கப்படுகிற இயக்க மான, வேட்டையாடப்படுகிற இயக்கமாகக் கழகம் இருந்தது. இந்திய அரசியல் வரலாற்றில் இத்தனை கொடுமைகள் வேறு எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டது கிடையாது.

இவ்வளவுக்குப் பிறகும் அறிஞர் அண்ணா உருவாக்கிய கழகம் கட்டுக்கோப்புக் குறையாமல் இந்தத் தேர்தலையும் தனித்து நின்று சந்திக்கிறது என்றால், அதற்கு கொள்கை உரம் படைத்த கழகச் செயல் வீரர்கள்தான் காரணம் எனக் குறிப்பிட்டதுடன், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் மாநிலக் கட்சியாகப் பல திட்டங்களைத் தொடங்கி வைத்த ஒரே கட்சி தி.மு.கழகம் என்பதையும் சட்டமன்றத் தேர்தல் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

## வகுப்புவாதத்துக்கு எதிராக முதல் குரல்

1980-ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் தலைதூக்கத் தொடங்கிய வகுப்புவாத அரசியலுக்கு எதிர்வினையாற்றிய கட்சியாக தி.மு.க இருந்ததைத் தேர்தல் அறிக்கையிலும் காணமுடிகிறது.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் இந்திய ஜனநாயகத்தில் தலைதூக்கும் புதிய அபாயம் என வகுப்புவாத அரசியலைக் கண்டித்துள்ளது.

‘எமர்ஜென்சி’ என்பது ஜன நாயகத்தில் ஏற்பட்ட தடுமாற்றம்! அது தற்காலிகமானது! மக்களால் மாற்றப்படக்கூடியது! மாற்றப்பட்டது! ஆனால், வகுப்புவாதம்? ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் வகுப்புவாத வெறித்தனமான கொள்கை, மக்களை மூளைச்சலவை செய்து நடைமுறையில் ஒரு சாராரை நிரந்தரமான சர்வாதி காரத்தில் அல்லவா கொண்டு போய் நிறுத்தி விடும்?

**வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்குவதில், கழகம் கொண்டிருக்கும் கொள்கை உறுதி தேர்தல் வாக்குறுதியாகவே எழுகிறது.**

இந்து ராஷ்ட்ரிய திட்டம் ஒரு அபாய அறிகுறி அல்லவா? இந்தக் கண்மூடித்தனமான வகுப்புவாதக் கொள்கைகளை வேரூன்றவிட மாட்டோம், விடவே மாட்டோம் என தி.மு.க உறுதி எடுத்துக் கொள்கிறது” என்றது.

நாற்பது ஆண்டுகளைக் கடந்தும் இந்த உறுதியில் இருந்து தி.மு.க வழுவியதில்லை என்பதைக் குறிப்பிடத்தான் வேண்டும். வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக வலுவான கூட்டணியை உருவாக்குவதில், கழகம் கொண்டிருக்கும் கொள்கை உறுதி தேர்தல் வாக்குறுதியாகவே எழுகிறது.

## தமிழும் விஞ்ஞானமும்

1980-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் கழகத்தின் வாக்குறுதிகளில் கவனிக்கத்தக்க ஒன்று “விஞ்ஞான யுகத்துக்கு ஏற்ற வகையில், தமிழ்மொழியைப் பல்வேறு துறைகளில் வளர்க்கவும், பயன்படுத்தவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைத்திட அனைத்து ஏற்பாடுகளையும் விரைந்து செயல்படுத்துவோம்” என்கிறது.

இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம், எம்.ஜி.ஆர் அரசுக்கு ஏற்பட்டது. ஆனால், தி.மு.க ஆட்சிகாலத்தில்தான் தமிழ்ப் பல்கலையின் செயல்கள் வேகம்கண்டன என்பது தமிழ்ச் சான்றோர் அறிவர்.

அதுபோல, விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப தமிழைக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற தொலைநோக்குதான் இன்று இணைய உலகில் தமிழ்மொழியின் வளர்ச்சியும் வேகமும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தனது ஆட்சிக் காலங்களில் அதைச் செயல்படுத்தும் முனைப்பையும் கலைஞர் கொண்டிருந்தார்.

1984 -ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை, இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குக் கவனம் குவித்துள்ளது. “இன்னுயிர் தந்தேனும் இலங்கைத் தமிழரைக் காப்போம்” என தேர்தல் அறிக்கை சிறப்பு மாநாட்டில் உரையாற்றி இருக்கிறார் கலைஞர்.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய அரசு சர்வதேச கருத்தைத் திரட்டாமல் இருப்பதற்கான கண்டனத்தை வெளிப்படுத்தி இருந்தது. எம்.ஜி.ஆரின் உடல்நிலை குறித்த உண்மையை, உலகுக்கு அறிவிப்போம் என்கிற ஒரு வாக்குறுதியும் உள்ளது.

## நலிவு தீரும்

1989-ஆம் ஆண்டு அறிக்கை “கூட்டாட்சிக்கு குரல் கொடுப்போம், காட்டாச்சிக்கு விடை கொடுப்போம்” என்றும், “யாரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால், நாடு வாழும், நலிவு தீரும்” என்றும் பேசி இருக்கிறது.

அந்தத் தேர்தல் அறிக்கையும் மாநில உரிமை பேசியது. “நமது மாபெரும் நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தவும், விரிவாக்கவும் உண்மையான கூட்டாட்சி முறையினால் மட்டுமே முடியும் என்று உறுதியாக நாங்கள் நம்புகிறோம்.

மாநிலங்களைப் பலப்படுத்துவது, ஒன்றிய அரசை பலவீனப்படுத்துவதாக என்று அர்த்தமில்லை, அதற்கு மாறாக மாநிலங்களைப் பலப்படுத்துவதன் மூலமாகவே ஒன்றிய அரசு தனது திட்டங்களைச் சரிவர நிறைவேற்ற முடியும்” என்றும் அறிக்கை வலுவாகப் பேசியது.

ஒன்றிய அரசின் முன்னால், மாநிலங்கள் சுயமரியாதை இழந்து பிச்சைப் பாத்திரத்துடன் கெஞ்சி நிற்கும் நிலையை மாற்றி, அவை உண்மையான சுயாட்சி பெற வேண்டும் எனப் பேசியது 1989-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. கொண்ட கொள்கையில் நழுவாமல் அந்தக் கோரிக்கைக்கு இப்போதும் உயிர் கொடுத்துக் கொண்டிருப்பதுடன், அதற்குக் குரல் கொடுத்து, களத்தில் நிற்கவும் செய்யும் ஒரே மாநிலக் கட்சியாகத் தி.மு.க.வை மட்டுமே சொல்ல முடிகிறது.

1989-சட்டமன்றத் தேர்தலில் குறிப்பிட வேண்டிய விஷயம், மிகப் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடி மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசம். இந்த அறிவிப்பு அதற்கு முன் பி. யு. சி. கல்வி வரை இலவசமாக இருந்தது. கல்விக் கட்டமைப்பில் அடுத்தத் தலைமுறையை நகர்த்த வேண்டிய அவசியத்தை அந்தத் தேர்தல் அறிக்கையில் பேசினார் கலைஞர்.

முறைசாரா தொழிலாளர்களின் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், காப்பீடு மற்றும் இறப்பின் போது உதவித்தொகை சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவது, முதியோர் ஓய்வூதிய திட்டம் 20 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு மருத்துவமனை, அவற்றில் இலவச மருந்துகள் என மாபெரும் முன்னெடுப்பை 89 தேர்தல் உறுதி செய்கிறது.

“நாடு நலம் பெற பாடுபடும் வர்க்கம் பயன் பெற” என்றது 1991-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. ஆறு மாதக் குழந்தையிலிருந்து ஊட்டச்சத்து அளிக்க மாபெரும் திட்டத்துக்கு முன்னறிவிப்பு செய்கிறார். ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பத்துப் பெண் பிள்ளைகளுக்கு மருத்துவம், பொறியியல் போன்ற தொழிற்கல்வி இலவசமாக வழங்கப்படும் என்கிறார்.

## மாநில உரிமைகளின் முழக்கம்

கழகத்தின் எல்லா தேர்தல் அறிக்கைகளும் மாநில சுயாட்சியை வலியுறுத்துகின்றன. இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காத்திட, ஒற்றுமையை ஆழமான அடித்தளத்தில் அமைத்திட முனைகிறது.

“முழுமையான, உண்மையான கூட்டாட்சி முறையை, மாநில சுயாட்சி அடிப்படையிலான அரசு என்று சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று கழகம் தொடர்ந்து போராடும்” என 1996-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை பேசுகிறது. அந்நிய ஏகாதிபத்திய முறையில் ஒன்றிய அரசு இயங்கி வருவது மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது.

அப்போது உருவாகியிருந்த புதிய போக்குகளையும் கவனத்தில் எடுத்துக் கொள்கிறது கழகத்தின் தேர்தல் அறிக்கை.

“புதிய பொருளாதாரக் கொள்கை ஏழை எளியோரையும், தொழிலாளிகளையும் விவசாயிகளையும், நலிந்த பிரிவினரையும், நடுத்தர வர்க்கத்தோரையும் மேலும் ஏழ்மையில் ஆழ்த்தும். எனவே புதிய பொருளாதாரக் கொள்கையைத் திருத்தி அமைக்க வலியுறுத்துவோம். எளிய மக்களைப் பாதிக்காத வகையில் பாதுகாப்பு வளையம் (SAFETY NET) உருவாக்குவோம் என்கிறது.

அப்போது ஆட்சி அமைத்த கழக அரசுதான் புத்தாயிரமாண்டின் நவீன வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ப தமிழ்நாட்டை வடிவமைத்தது. அந்தப் பாதுகாப்பு வளையத்தில்தான் இப்போது நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

...தொடரும்.

## திராவிட இயக்க இதழ்கள் - திராவிட சினிமா



இந்த ஆண்டு நூற்றாண்டு காணும் திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ் ‘திராவிட சினிமா’. 1955-ஆம் ஆண்டு சென்னையில் இருந்து வெளிவந்த இந்த இதழ் வார இதழாக மலர்ந்தது.

இதழின் முகப்புக்கு கீழே **‘தென்னகத்தின் ஒரே ஒரு கலை வார ஏடு’** என்ற அறிவிப்புடன் ஒரு அணா விலையில் விற்பனை செய்யப்பட்டது இந்த இதழ். படத்தில் காண்பது 1956 -ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ஆம் தேதியிட்ட இதழ். இதில் ஆசைத்தம்பியின் கதை வசனத்தில் உருவான **‘வாழ்விலே ஒரு நாள்’** படம் பற்றிய விமர்சனம் வெளிவந்துள்ளது. அந்த இதழில் வெளியான கேள்வி பதில் பகுதியில் ஒன்று:

“ஷேக்ஸ்பியர், பெர்னாட்ஷா ஆகியவர்களைப் போலச் சிறந்த நாவல் கதைகளை இயற்றுபவர்கள் தற்போது நமது நாட்டில் யார் யார்?”

“எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஒருமுறை கல்கி, அண்ணாவை ‘தமிழ்நாட்டு பெர்னாட்ஷா’ என்று சொல்லியிருப்பது தங்களுக்குத் தெரியாதா?” என்கிறது.

சுவாரஸ்யமான சினிமா செய்திகளுடன், சினிமா விமர்சனம், உலகச் சினிமா தொடர்பான துணுக்குகள், சினிமா தொடர்பான கேள்வி பதில் போன்றவற்றைத் தாங்கி இந்த இதழ் வெளிவந்தது.

## :.ப்ளாஷ்பேக்



### திருமணத்தில் தமிழீழம்!

எனது தந்தை கோ.சக்திவேல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ஆவார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989-ஆம் ஆண்டு திருவோணம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கினார். 1984-ஆம் ஆண்டு எனது தாய்-தந்தையின் திருமண விழாவை எங்கள் இல்லத்துக்கே வந்து தலைவர் நடத்தி வைத்து, ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து உரையாற்றியதாகப் பெற்றோர் கூறி கேள்விப்பட்டிருக்கிறேன். மூத்த நிர்வாகி எல்.கணேசன், அப்போதைய தஞ்சை நகரச் செயலாளர் பூபதி, திருவோணம் ஒன்றியச் செயலாளர் முத்துச்சாமி ஆகியோர் உடனிருந்தார்கள்.



கரிகாலன்

**-ச.கரிகாலன், பின்னையூர், ஒரத்தநாடு.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### உத்தமர் சங்கரலிங்கனார்!

**1956-ஆம் ஆண்டு ஜூலையில் ‘தமிழ்நாடு’ என சென்னை மாகாணத்துக்கு பெயர் சூட்ட வேண்டும் என்கிற கோரிக்கையுடன் தியாகி சங்கரலிங்கனார் உண்ணா விரதம் தொடங்கினார். அறிஞர் அண்ணா, ம.பொ.சி ஆகியோர் உண்ணா விரதத்தைக் கைவிடுமாறு கேட்டுக் கொண்டும், அவர் தனது போராட்டத்தைக் கைவிடவில்லை. தொடர் உண்ணா விரதத்தால் உடல் நலிவடைந்து, செப்டம்பரில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், அக்டோபர் 13-ஆம் தேதி உயிரிழந்தார். ‘உத்தமர் சங்கர லிங்கனார்’ என தலைப்பிட்டு ‘நம்நாடு’ இதழ் வீரவணக்கம் செலுத்தியது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 279




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131